சைவ பரிபாலன சபை வெளியீடு — உ — பிரதி விலை: ரூபா 12

ஆரம்பம்: விரோதி ஸு ஆவணி ீ 26 உ (1889) — செய்தித் தாளாகப் பதிவு பெற்றது.

# இந்து சாதனம்
(HINDU ORGAN)

புத்தகம்: 113 — சித்திரபானு வருடம் ஆனித் திங்கள் 10ம் நாள் (24.06.2002) ஆனிப் பூரணை — இதழ்: 3

## உண்ணாமுலை உமையாளொடுறை அருணாசலேஸ்வரர் திருக்கோவிலில் ஆனித்திங்கள் பதின்மூன்றாம் நாள் மகாகும்பாபிஷேகம்

### உன்னினர் தங்கட்கெல்லாம் ஒல்லையில் முத்தி நல்கும்

# அண்ணாமலை அண்ணல்

### அண்ணாமலையான் அடிக்கமலம் பாடி இறைஞ்சுவோம்

*பஞ்சபூதத் தலங்களுள் தேயு (நெருப்பு)த் தலமாக விளங்குவதும், நினைக்க முத்தியருளும் தலமாதலால் முத்திதரும் தலங்களுள் முதன்மை பெற்றதும், மாணிக்கவாசகசுவாமிகளினால் திருவெம்பாவை, திருவம்மானை அருளிச்செய்யப்பட்ட பெருமைக்குரியதும், அருணகிரிநாதர் வாழ்வில் அருட்திருப்பம் ஏற்படுத்தியதும், இரமண மகரிஷி தவமிருந்து அருள் பெற்றதும், கார்த்திகைத் தீபதரிசனப் பெருவிழா நடைபெறுவதும் ஆகிய பல்வேறு சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்ட அற்புதத்தலமாகிய திருவண்ணாமலைத் திருப்பதியிலே, நிகழும் ஆனித்திங்கள் பதின்மூன்றாம் நாள் (27.06.2002) வியாழக்கிழமை முற்பகல் 9.27 க்கும் 10.27க்கும் இடைப்பட்ட சுபவேளையில் மகாகும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.*

கும்பாபிஷேகத்தை நேரில் தரிசிக்க முடியாவிடினும், நினைக்க முத்தி அளிக்கும் அண்ணாமலையான் அடிக்கமலம் நினைந்து இறைஞ்சி, **அண்ணாமலையானைப் பாடுதுங்காண்** என மணிவாசகர் அருளிய வழியில் அண்ணாமலையானைப் போற்றிப் பாடி நலமடைவோம்.

பஞ்சபூதத் தலங்களுள் ஒன்று: இறைவன் நிலம்(மண்), நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் எனப்படும் பஞ்சபூதங்கள் ஐந்திலும் பரவி நீக்கமற விளங்குகிறார். காஞ்சியில் மண் வடிவிலும், திருவானைக்காவில் நீர் வடிவில், திருக்காளத்தியில் காற்று வடிவிலும் திருவண்ணாமலையில் 'பெரும் நெருப்பாக ஜோதி வடிவிலும் சிதம்பரத்தில் பரவெளியாகவும் அருள் பாலிக்கிறார். பிரம்ம விஷ்ணுக்களின் அகந்தையை அடக்கச் சிவனார் சோதியாய் - சுடரொளியாய் - அழலுருவாய் நின்ற கதை யாமறிந்ததே. இறைவன் அழலுருவாய் நின்ற மலையே அண்ணாமலை. அண்ணாமலை என்றால் அண்மிக்க முடியாத - எட்டாத - மலையெனப் பொருள். அண்ணாமலை என்னும் இத்திருத்தலத்தை வடமொழியில் அருணாசலம், அருணகிரி எனவும் வழங்குவர். அசலம் = மலை, கிரி = மலை, அருணம் = செந்நிறம். இறைவன் அழலுருவாய் நின்ற செம்மலை அருணகிரி.

அண்ணாமலை உருவிலிருந்த இறைவரைக் கண்டு பேரானந்தமடைந்த பிரமனும் திருமாலும் வேண்ட, அவர் மலையடி வாரத்தில் சிவலிங்கத்திருமேனி கொண்டெழுந்தருளியதாயும் பின் அரிபிரமர்கள் தேவதச்சனை கொண்டு. ஆலயமும் நகரமும் முந்நூறுதீர்த்

(3ம் பக்கம் பார்க்க)

### அணி அண்ணாமலையுளானே

ஓதிமா மலர்கள் தூவி உடையவன் பங்காமிக்க
சோதியே துளங்கும் எண்தோள் சுடர் மழுப்படையினானே
ஆதியே அமரர்கோவே அணி அணா மலையுளானே
நீதியால் நின்னையல்லால் நினையுமா நினைவிலேனே

- அப்பர் (நான்காம் திருமுறை - பதிக எண் 63)

# ஆறுமுகநாவலர் முதல் பண்டிதமணி வரை சைவம் வளர்த்த சான்றோர்கள் - 17:

# சைவப்பெரியார் புலோலியூர் சிவபாதசுந்தரனார்

(புத்தகம் 112 இதழ் 12 இன் தொடர்ச்சி)

## சைவ நூல் எழுத்தாளர்:

தமிழ், வடமொழி, ஆங்கிலம், தர்க்கம், கணிதம், மனோதத்துவம் ஆகிய துறைகளில் புலமை பெற்றிருந்த சைவப்பெரியார் அவர்கள் சைவ சமயத் துறையில் ஊறிப் பழுத்த ஞானப் பழமாக விளங்கினார். வேத வேதாங்கங்கள், ஆகமங்கள், திருமுறைகள், சித்தாந்த சாஸ்திரங்கள் முதலியவற்றைக் கசடற ஆழமாகக் கற்றுச் சிந்தித்து அழகாகவும் ஆழமாகவும் ஆணித் தரமாகவும் பேசவும் எழுதவும் வல்லமை பெற்றவராகவும் திகழ்ந்தார்.

சைவப் பெரியாருடைய உரைநடை விஞ்ஞான ரீதியானதாகவும் அளவை நூல் பிரமாணத்துக்கு அமைவாகவும் எளிமையானதாகவும் தெளிவானதாகவும் அமைந்திருந்தது. சமய உண்மைகளை விளக்குவதையே நோக்கமாகக் கொண்டிருந்த சைவப்பெரியார் புற அலங்காரங்களின்றித் தான் விளக்க முற்பட்டதை விஞ்ஞான ரீதியான உரைநடையிலே எழுதினார். சைவப் பெரியாரின் ஆக்கங்களில் அவரது வாதத் திறமையைக் காணலாம். கண்டிப்பதற்குரியவற்றை அறிவுபூர்வமான - தர்க்க ரீதியான - வாதத்தின் மூலம் நிர்மூலமாக்குவது சைவப்பெரியாரின் அணுகுமுறையாக அமைந்தது.

சைவப் பெரியார் சைவநூல்களை எழுதவேண்டுமென்ற ஆர்வம் ஏற்படக் காரணமாக இருந்தது "சைவ சமயத்தவர்கள் இதர சமயத்தவர்களாலே வஞ்சிக்கப்பட்டு சைவ சமயத்தைக் கைவிடுதலைத் தவிர்க்க வேண்டும்" என்ற அவரது பேராசையாகும். சைவப் பெரியார் தமது நண்பரான திரு.செ.வே. ஜம்புலிங்கம்பிள்ளை என்ற தமிழ் நாட்டுச் சைவப் பெரியாருக்கு எழுதிய கடிதமொன்றில் மேற்கண்டவாறு கூறியுள்ளார். இக்கடிதம் "சைவ சமய சாரம்" என்ற சைவப் பெரியாரின் நூலிற்கு திரு. ஜம்புலிங்கம்பிள்ளை எழுதிய முன்னுரையில் பிரசுரமாகியுள்ளது.

அக்கடிதத்தில் தான் ஏன் சைவ நூல்கள் எழுதத் தொடங்கினார் என்பதைச் சைவப் பெரியார் பின்வருமாறு விளக்கியுள்ளார்:

"சித்தியாரிலே முதற்பாகம் பிறமத கண்டனம். அதற்கு அவ்வளவு முதன்மையுள்ளது. நான் என் வாழ்நாளைக் கிறிஸ்துமத கண்டனத்துக்கே அர்ப்பணஞ் செய்திருந்தேன். கிறிஸ்துமத கண்டன நூலொன்று விஸ்தாரமாக எழுதுவதற்கு நான் தொடங்கிய போது, சைவநூல் ஒன்றாயினும் எழுதுவதற்கு முன் பிறமத கண்டன நூல் எழுதுதல் பொருத்தமற்றதெனக்கண்டு சைவபோதம் முதற் புத்தகத்தை எழுதினேன். அது போதியதன்றெனக் கண்டு இரண்டாம் புத்தகத்தை எழுதினேன். இப்படியே மற்றவற்றையும் எழுதினேன். இவை என்னுடைய நேரத்தைக் கவர்ந்தமையால் நான் தொடக்கத்தில் எழுதுவதற்கு எண்ணியிருந்த கிறிஸ்துமத கண்டன நூல் எழுதப்படாமற் போயது......"

சைவப் பெரியாரின் இக்கூற்று அவர் எவ்வாறு ஏன் **சைவபோதம்** நூல் வரிசையை எழுத ஆரம்பித்தார் என்பதையும் அதைத் தொடர்ந்து அதன் துணை நூற் தொடர்களாக **திருவருட்பயன், சைவக் கிரியை விளக்கம், கந்தபுராண விளக்கம், திருப்பெருவடிவம், சுட்டிரபோதம், திருவாசக மணிகள், சைவசமய சாரம்** ஆகிய நூல்களையும் எழுதினார் என்பதையும் விளக்குகிறது. இந்நூல்கள், சைவ சித்தாந்த சாஸ்திரங்களில் அடங்கியுள்ள நீதித் தத்துவங்களை மிகவும் எளிய மொழிநடையில் விளக்குவதற்காகவும் சைவ நாயன்மார்களது - சிறப்பாக நான்கு சமய குரவர்களது - மாட்சியையும் புராணங்கள் சொல்ல முற்படும் உண்மைகளையும் சமய விடயங்களில் முதிர்ச்சியடையாத மனநிலையிலுள்ளவர்களுக்கும் இளைய வயதினர்க்கும் உணர்த்துவதற்காகவுமே எழுதப்பட்டன.

சைவப் பெரியார் அவர்கள் தனித்தும், திரு. ஜம்புலிங்கம் அவர்களைக் கொண்டும், இருவருமாகச் சேர்ந்தும் பல சமய சம்பந்தமான சிறுபிரசுரங்களைத் தயாரித்து அச்சிடுவித்து இலவசமாக விநியோகம் செய்தார்.

இவ்வாறாக சைவசமயம் சம்பந்தப்பட்ட நூல்கள் எழுதுவதில் அவரது காலம் கவரப்பட்டதால், அவர் எழுத எண்ணியிருந்த சைவ சமயிகள் பார்வையில் கிறிஸ்து சமயத்தைக் கண்டிக்கும் நூல் எழுதப்படவில்லை. இருப்பினும், செல்வி வயலற் பரஞ்சோதி என்னும் கிறிஸ்தவ அம்மையார் சைவ சித்தாந்தம் பற்றிய ஒரு நூலைத் தனது கலாநிதிப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரையாக எழுதியிருந்தார். அதில் சைவசித்தாந்தக் கருத்துக்கள் சிவஞானபோதத்திலிருந்து வழுவி இருந்ததைக் கண்டு சைவ உலகம் புழுங்கியது. ஞானபாதக் கருத்துக்கள் வெகுவாகப் பிழைபட்டிருக்கக் கண்ட திருக்கைலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்தார் கொதித்தெழுந்தனர். அவர்கள் இந்நூலுக்கு மறுப்பு எழுதக்கூடிய அறிவாழம் மிக்கவர் சைவப் பெரியார் அவர்களே எனக்கண்டு அவரை எதிர்மொழிக்கு மறுமொழி எழுதுமாறு கேட்டுக்கொண்டனர். இதன் விளைவாக தகர்க்க முடியாத வகையில் தர்க்க ரீதியான கண்டனத்தோடு கூடியவொரு நூல் எழுந்தது. அதுதான் "An Outline of Shivagnana Bodham with a Rejoinder to a Christian Critic." என்ற ஆங்கில நூல். இந்நூலுக்கு தர்மபுர ஆதீனத்துச் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் ஆங்கிலத்தில் எழுதிய அணிந்துரை மிக ஆணித் தரமாக அமைந்துள்ளது.

இந்நூலில் சைவப் பெரியாரின் வெற்றிகொள்ள முடியாத தர்க்கவாதம் ஒளி வீசுவதையும் கிறித்துவ கண்டனகாரர்களது பிழையான கூற்றுக்கள் தகர்த்தெறியப்படுவதையும் காணலாம். இந்நூல் காசிப் பல்கலைக்கழகத்தில் சைவசித்தாந்தத்தை ஒரு பாடமாகக் கொண்டு

(15ம் பக்கம் பார்க்க)

உ

திருச்சிற்றம்பலம்

## சொல்லால் மலிந்த பாடல் வல்லார் மன்னி வாழ்வர்

பூவார் மலர்கொண்டு அடியார் தொழுவார் புகழ்வார் வானோர்கள்
மூவார் புரங்கள் எரித்த அன்று மூவர்க்கு அருள்செய்தார்
தூமா மழைநின்று அதிரவெருவித் தொறுவின் நிரையோடும்
ஆமா(ம்) பிணைவந்து அணையும் சாரல் அண்ணாமலை யாரே.

அல்லாடு அரவம் இயங்கும் சாரல் அண்ணாமலை யாரை
நவ்லார் பரவப் படுவான் காழி ஞான சம்பந்தன்
சொல்லால் மலிந்த பாடலான பத்தும் இவை கற்று
வல்லார் எல்லாம் வானோர் வணங்க மன்னி வாழ்வாரே.

திருச்சிற்றம்பலம்.

–சம்பந்தர் (முதலாம் திருமுறை – பதிக எண் 69)

# அண்ணாமலை அண்ணல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தங்களும் அமைத்ததாகத் தலவரலாறு கூறுகிறது.

### நினைக்க முத்திதரும் தலம்:

திருவாரூரில் பிறக்க முத்தி. காசியில் இறக்க முத்தி. சிதம்பரத்தில் (தில்லையில்) தரிசிக்க முத்தி. அண்ணாமலையாரை நினைக்க முத்தி. பிறப்பு, இறப்பு தரிசனத்திற்கான சந்தர்ப்பம் எமது கையிலில்லை. ஆனால் - பூர்வ புண்ணியமிருந்தால் - நினைக்க முடியும். எனவே முத்தித் தலங்களுள் திருவண்ணாமலை பெருஞ் சிறப்புடையது.

### கோவிற் பொலிவு:-

இருபத்தைந்து ஏக்கர் நிலப்பரப்பில் ஏழு பிரகாரங்களுடன் அமைந்துள்ள இத்திருக் கோவிலில் நாள்தோறும் ஆறுகாலப் பூசைகள் நடைபெறுகின்றன. தமிழகக் கோவில் திருவிழாக்களில் முதன்மைச் சிறப்புடையனவாக விளங்குவன சிதம்பரம் ஆருத்ரா தரிசனப் பெருவிழாவும் திருவண்ணாமலை தீபதரிசனப் பெருவிழாவும் ஆகும். தீபதரிசனப் பெருவிழாக் காண முழுத் தமிழகமுமே திருவண்ணாமலையில் திரளும். திருவெம்பாவை பாடப்பட்ட திருத்தலமாதலால் மார்கழித் திங்கள் முழுவதும் ஆலயம் விழாக்கோலம் பூண்டிருக்கும்.

### குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம்:

பல அருளாளர்கள் வாழ்ந்த புனித பூமி திருவண்ணாமலை. இவர்களுள் பெரும் யோகியாகத் திகழ்ந்த தெய்வ சிகாமணி தேசிகரின் வழியில் வந்தவர் நாகலிங்க தேசிகர். இவர் இராமேஸ்வரத்திற்கு யாத்திரையாகச் சென்றபோது இராமநாதபுர ராஜா சேதுபதி அவர்களின் வேண்டுகோளை ஏற்று இராமநாதபுரம் சமஸ்தானத்தைச் சேர்ந்த ஐந்து கோவில்களின் நிர்வாகத்தைத் தாம் மேற்கொண்டதோடு, குன்றக்குடியில் '**திருவண்ணாமலை ஆதீனம்**' என்ற பெயரில் ஆதீனமொன்றை ஏற்படுத்தினார். அதுவே 'குன்றக் குடி திருவண்ணாமலை ஆதீனம்' என வழங்கப்படுகிறது. இவ்வாதீனத்தின் குருமகா சந்நிதானமாகத் தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் பின் தவத்திரு. பொன்னம்பல அடிகள் அரும்பணி ஆற்றுகிறார்கள்.

### மகாகும்பாபிஷேகம்:

கடந்த நூறு வருடகாலத்தில் நடைபெறும் மூன்றாவது கும்பாபிஷேகம் எதிர்வரும் வியாழக்கிழமை (27.06.2002)நடைபெறவிருக்கும் கும்பாபிஷேகமாகும். இதற்கு முன்னர் 1976 ஆம் ஆண்டில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. இப்போ ஐந்தரைக் கோடி ரூபா செலவில் திருப்பணிகள் செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெறுகிறது. கும்பாபிஷேகத்தை முன்னிட்டு பிரமாண்டமான யாகசாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. யாகபூசைகள் 22.06.2002 திங்கட்கிழமை ஆரம்பமாகியது. பத்துக்கால யாகபூசைகள் நிகழப்பெற்று வியாழக்கிழமை பூர்ணாகுதியாகி, கும்பங்கள் வீதி வலம் வந்து கும்பாபிஷேகம் நடைபெறும். சுமார் முந்நூற்றைம்பதுக்கு மேற்பட்ட சிவாச்சாரியார்கள் கும்பாபிஷேகக் கிரியைகளை நடத்தி வைக்கின்றனர். நாற்பத்தியிரண்டு கலசங்களுக்கு அபிஷேகம் நடைபெறவுள்ளது. எழுபத்தியிரண்டு அடி உயரமான புதிய கொடித்தம்பம் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது. கும்பாபிஷேக நிகழ்வுகளில் தமிழக அனைத்து சைவாதீனங்களின் முதல்வர்களும் காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜெயந்திர சரஸ்வதி ஸ்வாமிகளும் ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளும் தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் ஆகியோரும் பங்குபற்றுகின்றனர்.

### சிறப்புத்தபாலுறை:

மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு திருவண்ணாமலை அஞ்சலகத்தில் சிறப்பு தபாலுறை வெளியிட்டு வைக்கப்பட்டது. குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனமுதல்வர் தவத்திரு பொன்னம்பல அடிகள் முதற் தபாலுறையைப் பெற்றுக் கொண்டார். மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு சிறப்பு பேருந்து, புகையிரத சேவைகள் தமிழ்நாட்டின் பல பகுதிகளிலுமிருந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# தன்னலமற்ற சேவையாளர் அமரர் முருகேசு கந்தசாமி

கிளிநொச்சி மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரியாகப் பணியாற்றி இளைப்பாறியவரும் கிளிநொச்சி யோகர் சுவாமிகள் திருவடி நிலையத் தலைவராகவும் கிளிநொச்சி முதியோர் இல்லத்தின் காவலராகவும் விளங்கிய "கந்தசாமி ஐயா" எனப் பலராலும் வாஞ்சையுடன் அழைக்கப்பட்ட திரு. முருகேசு கந்தசாமி அவர்கள் திடீரென 18.10.2001 ஆம் திகதி அமரத்துவம் அடைந்தமை கிளிநொச்சி வாழ் மக்களுக்குப் பேரிழப்பாக அமைந்துவிட்டது.

யாழ்ப்பாணம் அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், தமது இருபத்தொராவது வயதில் பொது சுகாதாரப் பரிசோதகராகச் சேவையை ஆரம்பித்து நாட்டின் பலவேறு பகுதிகளிலும் கடமையாற்றி இறுதியில் கிளிநொச்சி வன்னேரிக் குளத்தைத் தமது வதிவிடமாக்கிக் கொண்டார்.

எழுபத்தைந்து வயதிலும் பழைய மிதி வண்டியொன்றில் பல மைல் தூரம் பயணித்து, கடமையிற் கண்ணாகவிருந்து வன்னி மண்ணில் 'வருமுன் காப்போம்' என அவரால் அழைக்கப்பட்ட சுகாதாரத்துறை முன்னேற்ற நடவடிக்கைகளால் கிளிநொச்சி வாழ் மக்களின் நெஞ்சங்களில் நீங்காத இடத்தைப் பெற்றுக் கொண்டார்.

1995,1996ஆம் ஆண்டுகளில் பெருந்தொகையாக மக்கள் யாழ் குடாநாட்டிலிருந்து வன்னிக்கு இடம் பெயர்ந்து சென்றபோது இவர் இரவு பகல் பாராது -பிரயாணச் சிரமங்கள் நோக்காது - ஆற்றிய மகத்தான சேவைகள் அவரின் சேவையின் சிகரமாக அமைந்திருந்தது.

திரு. கந்தசாமி அவர்கள் கிளிநொச்சி யோகர் சுவாமிகள் திருவடி நிலையத்தைக் கிளிநொச்சியில் ஆரம்பித்து அதனூடாக சமயப்பணி புரிந்ததுடன் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட முதியோர்களது துயர் துடைத்து அவர்தம் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்த முதியோர் இல்லமொன்றை 1997 ஆம் ஆண்டில் அமைத்து அந்நிறுவனத்தைத் தனது அயராத உழைப்பாலும் நேர்மையான நிர்வாகத்தாலும் கட்டியெழுப்பியவர். விளம்பரத்தை நாடாது, அடக்கமாக பணிவுடன் ஆடம்பரமின்றி தனது சேவையை வன்னிவாழ் மக்களுக்கு வழங்கிய அர்ப்பணிப்பு மிக்க சேவையாளன்.

1997இல் ஐந்து முதியோர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட யோகர் சுவாமிகள் திருவடி நிலைய முதியோர் இல்லம் இன்று அறுபத்தைந்துக்கு மேற்பட்ட முதியோர்களின் காப்பகமாக விளங்குகிறது என்றால் அது கந்தசாமி ஐயாவின் அர்ப்பணிப்பு மிக்க சேவையின் விளைவேயாகும். 2000ஆம் ஆண்டில் தென்மராட்சி இடப்பெயர்வின் போது பாதிக்கப்பட்ட கைதடி முதியோர் இல்லத்திலும் தென்மராட்சியிலும் இருந்து வந்த இருபத்தியிரண்டு முதியவர்களைப் பயனாளிகளாக முதியோர் இல்லத்துள் உள்வாங்கி ஆதரித்தவர் திரு. கந்தசாமி அவர்கள்.

நலத்துறையில், ஆன்மீகத் துறையில், அன்புநேயத்துறையில் கந்தசாமி ஐயா அவர்கள் ஆற்றிய தன்னலமற்ற சேவைகளைக் கிளிநொச்சி மண் என்றும் மறக்காது. அவரது மறைவு வன்னி மண்ணுக்கு பேரிழப்பு. அவர் ஆரம்பித்து வளர்த்துவந்த யோகர் சுவாமிகள் திருவடிநிலைய முதியோர் இல்லத்தைப் பேணி வளர்த்து ஆதரிப்பதே நாம் அவருக்குச் செய்யும் கைமாறாகும். அவர் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

**முதியோர் இல்லத் தொடர்பு முகவரி:**

டாக்டர் ச. முருகானந்தன்,
செயலாளர்,
யோகர் சுவாமிகள் திருவடி நிலையம்,
ஐயனார் புரம்,
வன்னேரிக்குளம்,
கிளிநொச்சி.

திருச்சிற்றம்பலம்

## அல்லல் தீர்க்கும் அண்ணாமலை

பல்லில் ஓடுகை யேந்திப் பலஇலம்
ஒல்லை சென்று உணங்கல்கவர் வார் அவர்
அல்லல் தீர்க்கும் அண்ணாமலை கைதொழ
நல்ல வாயின நம்மை அடையுமே.

~ **அப்பர்** (ஐந்தாம் திருமுறை- பதிக எண் ஐந்து)

## அண்ணாமலையனை மறந்து உய்வனோ?

வட்ட னைம்மதி சூடியை வானவர்
சிட்ட னைத்திரு அண்ணா மலையனை
இட்ட னைஇகழ்ந் தார்புர மூன்றையும்
அட்ட னைஅடி யேன்மறந்து உய்வனோ.

~ **அப்பர்** (ஐந்தாம் திருமுறை - பதிக எண் நான்கு)

திருச்சிற்றம்பலம்

# சைவ பரிபாலன சபை

# தோற்றமும் வளர்ச்சியும் பணிகளும் -21

(புத்தகம் 113, இதழ் 2 இன் தொடர்ச்சி)

## யாழ்ப்பாணத்து "முடிசூடாமன்னன்" ஆக விளங்கிய அட்வகேட் சின்னத்தம்பி நாகலிங்கம்.

**நாவலர் பெருமான் சிவபதம் அடைந்த வருடமாகிய 1879 ஆம் ஆண்டின் பின்வந்த ஏறத்தாழ இருபது வருடங்களில் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட சமய, சமூக, கல்வி, பொருளாதார வளர்ச்சிகள் பல. அவையொவ்வொன்றிலும் தனது முத்திரையைப் பதித்துக் கொண்டவர் திரு. சின்னத்தம்பி நாகலிங்கம் அவர்கள். அக்கால கட்டத்தில் அவர் முன்னின்று நடத்தாத - அவர் சம்பந்தப்படாத - நல்ல நிகழ்ச்சி இல்லையென்றே கூறலாம். நாற்பத்திரண்டு வயது வரையே வாழ்ந்த அவர் சாதித்தவை ஏராளம். அவர் பாராளுமன்றத்துக்குப் போகாதபடியாலோ அல்லது வேறு எக்காரணத்தாலோ அவருடைய புகழ் இலங்கையில் பரவவில்லை. ஆனால் அவர் மறைந்தபொழுது ஆங்கில இந்து சாதனத்தில் அதன் அப்போதைய ஆசிரியர் திரு அ. சபாபதி அவர்களால் எழுதப்பட்ட இரங்கல் உரையில் அவர் ஆற்றிய சேவைகள் பூரணமாகக் கூறப்பட்டுள்ளன. அதன் மொழிபெயர்ப்பைக் கீழே தருகின்றோம்:**

"பொது நலன் கருதிய ஒரு முக்கிய புருஷனை யாழ்ப்பாணம் இழந்துவிட்டது. இவரில்லாமல் யாழ்ப்பாணம் என்ன செய்யப் போகின்றது. இவர் போன்ற இன்னொருவரை எப்பொழுது காண்போம்." இவர் இறந்த பொழுது யாழ்ப்பாணத்திற் பல பகுதிகளில் கூறப்பட்ட துக்கக் கூற்றுக்களில் இவை சில.

இவர் 1897 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 4ஆம் திகதி சிவபதம் அடைந்தார். இது போன்ற ஒரு துக்கச் செய்தியை யாழ்ப்பாண மக்கள் முன்னர் கேள்விப்பட்டதில்லை. யாழ்ப்பாணம் இதற்கு முன்னர் பல துறைகளில் சிறந்து விளங்கிய மேதாவிகளையும் பரோபகாரிகளையும் படைத்துள்ளது, ஆனால் நாகலிங்கம் அவர்களைப் போலத் தன்னலங்கருதாது வெற்றிகரமாக பொது நலங்கருதிச் செயலாற்றிய ஒருவரைக் காணவில்லை. சென்ற பதினைந்து வருடங்களில் இவரைப் போல் மக்கள் மத்தியில் செல்வாக்கும் ஆதிக்கமும் வேறு ஒருவருக்கும் இருந்திருக்கவில்லை. ஆகவே சகலர் மத்தியிலும் அவருடைய மரணம் பெரும் சோகத்தை உண்டாக்கியுள்ளது. அவர் மரணம் இந்துத் தமிழர் மத்தியில் மாத்திரம் துயரத்தை உண்டுபண்ணவில்லை. இவர் சாதி மத பேதமின்றி சேவை செய்துள்ளார். இதனை அவர் இறந்ததைக் குறித்து இலங்கையின் பல பாகங்களில் இருந்து வந்த இரங்கல் செய்திகளில் இருந்து அறிந்து கொள்ளலாம். யாழ்ப்பாணத்தில் இவருடைய இழப்பை தமது சொந்த இழப்பாக கருதாதவர் ஒருவரும் இருக்க மாட்டார். தனது நன்கொடைகள் மூலமும் தனிப்பட்டவர்களுக்குச் செய்த உதவிகள் மூலமும் பலருக்குச் சட்ட ஆலோசனைகள் இலவசமாகக் கூறியதன் மூலமும் அவர்களைத் தமக்குக் கடமைப்படுத்தியுள்ளார்.

திரு. நாகலிங்கம் அவர்கள் உண்மையான தேசபக்தன்.' அவரது ஒரே ஒரு நோக்கம் நாட்டை மேன்மைப்படுத்துவதாகும். இதனைச் செய்யும் பொழுது அதிகாரிகளின் கோபத்தையோ சந்தோஷத்தையோ கவனிக்க மாட்டார். அவர் பொதுச் சேவையில் ஈடுபட்டதுடன் யாழ்ப்பாணத்தில் ஒரு புதுச் சகாப்தம் ஏற்பட்டது. யாழ்ப்பாணம், கொழும்பு, கல்கத்தா முதலிய இடங்களில் சிறந்த கல்வியைப் பெற்று 1880ஆம் ஆண்டு சுப்பிறீம் கோட்டு அப்புக்காத்தாக யாழ்ப்பாணம் வந்தார். அக்காலத்தில் இவரது குடும்பம் பணத்தாலும் அதிகாரத்தாலும் உச்சநிலையில் இருந்தது. இவரது தகப்பன் திரு.ஏ. சின்னத்தம்பி அவர்கள் யாழ்ப்பாணத்து முடிக்குரிய பிரக்கிராசியாக இருந்ததோடு மிகவும் செல்வாக்கு உள்ளவராகவும் இருந்தார். யாழ்ப்பாணத்துக்கு வந்த உயர்கோட்டு நீதிபதிகள் எல்லோரும் அவரை மிகுந்த கண்ணியத்தோடு நடத்தினர். அப்பொழுது "வடதேசத்து இராஜா" என்று அழைக்கப்பட்ட அரசாங்க அதிபரான சேர். உவில்லியம் துவைனம் இவரை வடமாகாண வீதி பரிபாலன சபைக்கும், தான் தலைவராக இருந்த வைத்தியசாலை நிர்வாக சபைக்கும் அங்கத்தவராக்கினார். அவருடைய உறவினர்களும் உயர்ந்த உத்தியோகங்களில் அமர்ந்திருந்தனர். அவருடைய தமையனார் இளையதம்பி யாழ்ப்பாணக் கச்சேரியிற் பிரதம லிகிதராக இருந்தார். இவருடைய தமையனார் இராமலிங்கம் சிவில் சேவிஸ் பரீட்சையிற் சித்தி எய்தாத பொழுதிலும் அரசாங்க அதிபர் அவரை ரேகுப்பகுதியில் (சுங்கவரி) ஓர் உயர் உத்தியோகத்தில் அமர்த்தினார். இன்னும் பலர் இப்படிப்பெரும் உத்தியோகங்களில் இருந்தனர். இவற்றுக்கெல்லாம் மேலாக இவருடைய சகோதரியை திருவாங்கூர் உயர்தர நீதியரசர் T. செல்லப்பாபிள்ளை B.A.,B.L., விவாகஞ் செய்தார். நாம் மேலே கூறியவற்றிலிருந்து நாகலிங்கம் அவர்கள் இயற்கையாக அரசாங்கத்திற்கு சார்புடையோராய் இருக்க வேண்டுமே ஒழிய அரசாங்கத்திற்கு எதிராக இருக்க வேண்டிய சூழலில் வாழவில்லை.

அக்காலத்தில் துவைனம் வடமாகாண அரசாங்க உத்தியோகத்தில் உச்ச நிலையில் இருந்தார். மக்கள் இவருக்கு எதிராகச் செய்த முறைப்பாடுகள் ஒன்றிற்கும் அரசாங்கம் செவி கொடுக்கவில்லை. சேர் முத்துக்குமாரசாமி அரசாங்க அதிபரின் முறைக்கு மாறான செயல்களைப் பற்றி சட்ட நிருபண சபையில் கர்ச்சனை செய்தார். தேசாதிபதி சேர் யேம்ஸ் லாங்டன் (Sir James Longden) யாழ்ப்பாணத்துக்கு 1878 ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் விஜயஞ் செய்த பொழுது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் தலைமையில் ஒரு தூதுக் குழு கவர்ணரைச் சந்தித்து அரசாங்க அதிபரின் அநீதியான

**(12ம் பக்கம் பார்க்க)**

# தமிழகத் திருக்கோவிற் திருப்பணிகளை விரைவுபடுத்த காஞ்சி சங்கராச்சாரியார் தலைமையில் குழு

தமிழக இந்துசமய அறநிலைய ஆட்சித்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோவில்களில் திருப்பணி மற்றும் குடமுழுக்கு செய்யப்பட வேண்டிய அனைத்துத் திருக்கோவில்களுக்கும் மூன்றாண்டுகளுக்குள் திருப்பணிகள் செய்து முடிக்கத்தக்க வகையில் நடவடிக்கை எடுக்க ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் தலைமையில் உயர்நிலைக் குழுவொன்றைத் தமிழக அரசு அமைத்துள்ளது. அக்குழுவின் ஏனைய அங்கத்தவர்களாக

- தருமபுர ஆதீன முதல்வர் ஸ்ரீ ஞானசம்பந்த பரமாச்சாரிய தேசிக ஸ்சுவாமிகள்,
- திருவாவடுதுறை ஆதீன முதல்வர் சீர்வளர்சீர் சிவப்பிரகாச பண்டார சன்னிதி சுவாமிகள்,
- திருப்பணந்தாள் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக் குமாரசுவாமி தம்பிரான் சுவாமிகள்,
- திருநெல்வேலி நாங்குனேரி வானமாமலை மடம் ஸ்ரீமத் கலியன் வானமாமலை இராமானுஜ ஜீயர் சுவாமிகள்,
- திருச்சிராப்பள்ளி அல்லூர் சைவத்திரு விசுவநாத சிவாச்சாரியார்
- சென்னை அருள்மிகு காளிகாம்பாள் திருக்கோவிலைச் சேர்ந்த சைவத்திரு. சாம்பமூர்த்தி சிவாச்சாரியார்.
- சென்னை திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோவிலைச் சேர்ந்த திரு. வேங்கட கிருஷ்ண பட்டாச்சாரியார்.
- சென்னை அடையாறு பிரபல தொழில் அதிபர் திரு.ஏ.சி. முத்தையா
- இராஜபாளையம் ராம்கோ குறூப் நிறுவனங்களின் தலைவர் திரு.பி.ஆர். இராமசுப்பிரமணியராஜா.
- சென்னை TVS குறூப் கம்பெனிகளின் தலைவர் திரு. வேணு சீனிவாசன்
- மதுரை கப்பலூர் தியாகராஜா மில்ஸ் தலைவர் திரு. கருமுத்து கண்ணன்.

ஆகிய பதினொருவர் நியமிக்கப்பட்டுள்ளனர். இக்குழு மூன்றாண்டுகள் பதவி வகித்து, அக்கால எல்லைக்குள் தமிழகத்தில் உள்ள திருப்பணி மற்றும் குடமுழுக்கு செய்யப்பட வேண்டிய அனைத்துத் திருக்கோவில்களுக்கும் திருப்பணிகள், குடமுழுக்கு நடைபெறுவதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்துசமய அறநிலையத்துறை ஆணையரின் வேண்டுகோட்படியே இவ்வுயர் நிலைக்குழு தமிழக அரசினால் அமைக்கப்பட்டுள்ளது. இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் தமிழக அரசுக்குச் சமர்பித்த அறிக்கையில் பின்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

தமிழகத்தில் நாயன்மார்கள், ஆழ்வார்கள் மற்றும் பிற அருளாளர்களால் போற்றிப் பாடப்பெற்ற திருக்கோவில்கள் உட்பட இருபத்தெண்ணாயிரத்து முந்நூற்று ஐம்பத்தொரு (28351) திருக்கோவில்கள் திருப்பணி செய்து குடமுழுக்கு நிகழ வேண்டிய நிலையில் உள்ளன. இந்து சமய ஆகம விதிகளின்படி பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை திருக்கோயில்களுக்கு திருப்பணி செய்து குடமுழுக்கு நடத்த வேண்டும். இத்திருக்கோவில்களில் பெரும்பாலானவற்றில் உடனடியாகத் திருப்பணி மற்றும் குடமுழுக்கு நடத்த வேண்டியுள்ளது. ஆகவே பல்வேறு நிதி ஆதாரங்களைக் கொண்டு இது குறித்து துரித நடவடிக்கை மேற் கொள்ளப்பட வேண்டும்.

அறநிலையத்துறை சிறப்பு ஆணையர், மற்றும் ஆணையாளராகிய திரு.த.ரா.சீனிவாசன் அவர்களின் அறிக்கையையும் பரிந்துரையையும் ஏற்றுக்கொண்ட தமிழக அரசு மேற்கண்ட உயர் நிலைக் குழுவை அமைத்துள்ளது. அடுத்துவரும் சில வருடங்களுள் தேவாரப்பாடல் பெற்ற திருத்தலங்கள் அனைத்தும் திருப்பணி செய்யப்பட்டு அருளும் திருவும் பொலியவுள்ளன.

---

திருச்சிற்றம்பலம்

## வாதவூரடிகள் அடியிணைகள் போற்றி

பெருந்துறையிற் சிவபெருமான் அருளுதலும்  
பெருங்கருணைப் பெற்றி நோக்கிக்  
கரைந்துகரைத் திருகண்ணீர் மழைவாரத்  
துரியநிலை கடந்து போந்து  
திருந்துபெருஞ் சிவபோகக் கொழுந்தேறல்  
வாய்மடுத்துத் தேக்கிற் செம்மாந்  
திருந்தருளும் பெருங்கீர்த்தி  
வாதவூரடிகளடி யிணைகள் போற்றி

**மாணிக்க வாசக சுவாமிகள் குருபூசை:**  
**ஆனிமகம் (13.07.2002) சனிக்கிழமை**

திருச்சிற்றம்பலம்

சிறப்பாக நடைபெற்ற

# சிதம்பரம் புண்ணியநாச்சி அம்மையார் திருமட
# புதிய கட்டடத் திறப்புவிழா

சைவமக்களால் **கோவில்** என்றால் **சிதம்பரம் நடராசர் கோவில்** என்று போற்றப்படும் சிறப்பைப் பெற்றது சிதம்பரம். நீண்ட காலமாக ஈழத்தவர் பலர் சிதம்பரத்தில் பல அரிய பணிகள் செய்துள்ளனர்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் அங்கு செய்த பணிகள் பலரும் அறிந்ததே. சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலையை அமைத்து அவர் ஆற்றிய பணிகள் பல. அவ்வித்தியாசாலை இன்றும் சைவம் வளர்க்கும் கல்விக் கூடமாக ஓங்கி வளர்ந்துள்ளது. நாவலர் பெருமானுக்கு முன்பே ஞானப்பிரகாச சுவாமிகள் சிதம்பரத்தில் ஒரு குளம் அமைத்து, அங்கு வாழ்ந்து, அரிய பல நூல்களை எழுதிச் சைவத்திற்குப் பெரும் பணி ஆற்றினார். சிதம்பரத்தில் உள்ள ஞானப்பிரகாசர் குளமும், அதற்கு முன்னுள்ள சேக்கிழார் கோவிலில் அமைந்துள்ள ஞானப் பிரகாசரின் திருவுருவச் சிலையும் அவரின் பணிகளுக்கு ஞாபகச் சின்னமாக விளங்குகின்றன. இச்சேக்கிழார் கோவிலை நிறுவக் காணி வாங்கி விட்டவர் நாவலர் பெருமான்.

யாழ்ப்பாணச் சைவர்களுக்குச் சிதம்பரம் தாய்வீடு போன்றது. காங்கேசன்துறைக்கும் திருமறைக் காடெனப்படும் வேதாரணியத்திற்கும் இடையேயுள்ள கடலைக் கடந்து பாய்மரக் கப்பல்கள் பயணித்த காலங்களில் யாழ்ப்பாணத்தவர் அடிக்கடி சிதம்பரம் போவர். இப்புனிதயாத்திரை நெடுங்காலம் தொடரும் மரபு. சிதம்பரம் சபாநாயகர் கோவிலைச் சுற்றியுள்ள வீதிகளில் யாழ்ப்பாணத்தார் தாம் சிதம்பரம் போகும் போது தங்குவதற்காகக் கட்டிய திருமடங்கள் பல இருந்தன. ஞானப்பிரகாசர் குளத்தை ஒட்டிய திருவீதியில் மட்டும் இருபதுக்கு மேற்பட்ட மடங்கள் உள்ளன. ஒவ்வொரு மடத்துக்கும் ஒவ்வொரு பெயருண்டு. கொக்குவிலார் கொக்குவில் மடத்தில் தங்குவர். காரைநகரார் காரைநகர் மடத்தில் தங்குவர். பல்வேறு குழுக்கள் சார்ந்த மடங்களாக அவை அங்குண்டு. இந்தியாவும் இலங்கையும் அந்நியராட்சியிலிருந்து விடுபட்ட பின் கடவுச் சீட்டு, விசா, வெளிநாட்டு செலாவணி என்ற பல்வேறு தடைகளால் இப்புனித யாத்திரை மரபு வெகுவாகக் குறைந்து விட்டது. இந்த நிலைமை சிதம்பரத்திலுள்ள சமூக விரோதிகளுக்கு வாய்ப்பாக அமைந்துள்ளது. பல மடங்கள் சமூக விரோதிகளின் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியுள்ளன.

ஏறத்தாழ நூற்றியிருபது வருடங்களுக்கு முன் சிதம்பரம் மாலைகட்டித் தெருவில் நிறுவப்பட்டது புண்ணியநாச்சி அம்மை திருமடம். இதன் நிர்வாகம் 1934 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் கீழ் வந்தது. நாற்சார்வீட்டு அமைப்பில் மிகவும் பழுதுற்ற நிலையிலிருந்த இம் மடத்துக் கட்டடங்கள் அகற்றப்பட்டு, அவ்விடத்தில் நவீன வசதிகளுடன் இம்மடம் மீளமைக்கப் பட்டுள்ளது. இக்கட்டடத் திறப்பு விழா 16.6.2002 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் கோலாகலமாக நடந்தேறியது.

மடத்தின் முன் அமைந்துள்ள விநாயகர் கோவிலில் பூசை, அர்ச்சனை வழிபாடுகள் செய்யப் பட்டபின் மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இசைக்கலைமாணி பட்டம் பெற்றவருமான திரு.வீ உதயகுமார் அவர்களின் இறைவணக்கத்துடன் விழா ஆரம்பமாகியது. சிதம்பரம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அறக்கட்டளை அறங்காவலர் திரு.க. சுவாமிநாதன் அவர்களின் மகள் வைத்திய கலாநிதி பத்மினி கபாலிமூர்த்தி அவர்கள் மங்கள விளக்கேற்றித் திருமுறை ஓதினார்கள். விழாவிற்குத் தலைமை வகித்த சென்னைப் பல்கலைக்கழகத்துச் சித்தாந்தத் துறையின் முன்னாட் தலைவர் பேராசிரியர் முனைவர் வை. இரத்தினசபாபதி அவர்கள் நந்திக் கொடியேற்றி சிறப்பித்தார். விழாவிற்பங்கேற்ற பிரமுகர்களுக்கு மாலை அணிவித்துச் சிறப்புச் செய்தபின் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அறக்கட்டளைக் குழுத் தலைவர் திரு.எம்.சுப்பராயபிள்ளை அவர்கள் கட்டடத்தைத் திறந்து வைத்தார். சிதம்பரம் நகர் மன்றத் தலைவர் திரு. எம்.எஸ்.என். குமார் அவர்கள் முன்னிலை வகிக்க விழா நடைபெற்றது. (10ம் பக்கம் பார்க்க)

**அண்ணாமலை தொழுவார் வினை வழுவா வண்ணம் அறுமே**

திருச்சிற்றம்பலம்

உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான் மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைம் முழவு அதிரும்
அண்ணாமலை தொழுவார் வினை வழுவா வண்ணம் அறுமே

– சம்பந்தர் (முதலாம் திருமுறை : பதிக எண் –10)

திருச்சிற்றம்பலம்

உ



திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே
திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

சித்திரபானு ௵ ஆனி ௴ 10 (24.06.2002)

# சைவநெறிப் பாடநூல்கள்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினர் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ் மாவட்டச் சைவ சமய ஆசிரியர்களுக்கு நடத்திய சமயபாடக் கருத்தரங்குகளின் போது கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட சைவநெறிப் பாடநூல்களில் அவதானிக்கப்பட்ட தொண்ணூற்றியொரு தவறுகள் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.

அரசு வெளியிடும் சைவ சமயப் பாடநூல்களில் பல குறைபாடுகள் இருப்பதாக அடிக்கடி கூறக் கேட்டுள்ள போதிலும், அவை பதிப்பிக்கும் போது ஒப்பு நோக்காளர்களின் கவனக் குறைவால் ஏற்பட்ட எழுத்துப் பிழைகள் போலும் எனக் கருதப் பட்டதாலோ என்னவோ இக்குறைபாடுகள் பற்றி சமய நிறுவனங்களும் சமயப் பெரியார்களும் அதிகம் அக்கறை காட்டவில்லை எனக் கொள்ளலாம்.

மேற் சொன்ன கருத்தரங்குகளில் சுட்டிக் காட்டப்பட்ட பிழைகளை யாழ் சைவ பரிபாலன சபையின் தேர்வுப் பகுதியினர் தொகுத்து கைநூலொன்றாக இப்போ வெளியிட்டுள்ளனர் அரசு வெளியிட்ட சைவசமயப் பாடநூல்களில் எழுத்துப் பிழைகள் மட்டுமன்றி சொற்பிழைகள், பொருட் பிழைகள் உட்பட சைவ மரபுக்கு அந்நியமான பல விடயங்கள், சைவப்பண் பாட்டிற்கு அமைவில்லாத படங்கள், தெளிவற்ற - முரண்பட்ட - தகவல்கள் எல்லாம் மலிந்திருப்பதையும் அவை எவ்வளவு பாரதூரமானவை என்பதையும் இந்நூலைப் பார்வையிடுபவர் எவரும் இலகுவில் உணர்வர். இத்தவறுகளை ஒருங்குசேரச் சுட்டிக்காட்டிச் சைவ உலகின் கவனத்தை ஈர்த்துள்ள சைவபரிபாலன சபையினரின் தேர்வுப் பகுதியினர் பாராட்டுக்குரியவர்கள்.

சபையின் தேர்வுச் செயலர் சைவபூஷணம் திரு.வ.கந்தசாமி அவர்கள் இந்நூலுக்கான முகவுரையில் சுட்டிக்காட்டியிருப்பதுபோல் "மாணவப் பருவம் ஆசிரியரையும் பாட நூல்களையும் நூறுவீதம் நம்பும் பருவம். ஆசிரியர்கள் பாட அறிவிலும் நடத்தையிலும் பூரணத்துவமுடையவராயிருத்தல் எவ்வளவு முக்கியமானதோ அதே அளவு பாட நூல்களும் எள்ளளவும் தவறில்லாமல் இருக்க வேண்டும்."

நாவலர் பெருமான் தாம் பதிப்பித்த நூல்களில் எழுத்துப் பிழைகள், கருத்துப் பிழைகள் எதுவும் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்ததும் அவரது பதிப்புகளில் எழுத்துப்பிழைகள், கருத்துப் பிழைகளைக்காண முடியாதென்பதும் இங்கு சுட்டிக் காட்டுவது பொருத்தமானது.

சிவபெருமான் உமா தேவியாரைத் தமது "இடப் பாகத்தில்" கொண்டுள்ளார் என்பதற்குப் பதிலாக 'வலப் பாகத்தில்" கொண்டவர் என எழுதப் பட்டிருப்பது, தீட்சை என்பதற்கு"மலத்தைக் கெடுத்து ஞானத்தைக் கொடுப்பது" என்பதற்குப் பதிலாக "ஞானத்தைக் கொடுத்து மலத்தைக் கெடுப்பது" என விளக்கம் அளித்திருத்தல், திதிகள் பதினான்கு எனத் தரப்பட்டிருத்தல், ஆலய கர்ப்பக் கிரகத்தின் புறச் சுவர்களில் அமையும் மாடங்களைக் கூடுகள் எனக் கூறியிருத்தல், சைவசமயியெனத் தன்னை அழைக்கக் கூடியவரெவரும் அறிந்திருக்கக் கூடிய "அம்மையே அப்பா" எனத் தொடங்கும் திருவாசகப் பாடலைத் திருவிசைப்பா எனக் கூறியிருத்தல் போன்ற இன்னும் பல பாரதூரமான தவறுகள் இந்நூல்களை எழுதியவர்களின் புலமையை - சமய அறிவை - கேள்விக் குறியாக்கிவிட்டது.

மாணவருக்குக் கற்பிக்கத்தவறுவது குற்றம். அவர்களுக்குத் தவறான விடயங்களைக் கற்பித்தல் மன்னிக்கமுடியாத பெருங்குற்றம். பாடசாலை ஆசிரியர்கள் பாடநூல்களில் உள்ளவற்றை - அவற்றிலுள்ளபடியே - கற்பிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அவ்வாறிருக்கையில், தவறான விடயங்களைக் கொண்டுள்ள புத்தகங்களை மாணவர்களுக்குக் கொடுப்பது சமூகத்துக்குச் செய்யும் பெரும் துரோகமாகும்.

அரசு வெளியிடும் பாடநூல்களை எழுத ஆலோசனைச் சபை, எழுத்தாளர்குழு, பதிப்பாசிரியர்கள் என்றெல்லாம் நியமிக்கப்பட்டு இவர்களின் பெயர்ப்பட்டியல் ஒவ்வொரு தரத்திற்கான நூலிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளன. இவர்களுக்கு மேலாக ஒப்புநோக்குபவர்களும் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். அவ்வாறிருந்தும் இத்துணை பாரதூரமான பிழைகள் ஏன் ஏற்பட்டன என்பது அவசியம் ஆராயப்பட வேண்டியது.

இந்நூல்கள் எழுத்தாளர் குழுக்களின் குழு முயற்சியாகவிருப்பின், அக்குழு அங்கத்தினர் அனைவருமே இந்நூல்கள் எழுதுமருகதை அற்றவர்கள் எனவே கொள்ளப்பட வேண்டும். ஏனெனில், குழுமுயற்சியில் ஒருவர் விடக்கூடிய தவறை ஏனையவர்களுள் ஒருவராவது சுட்டிக் காட்டியிருப்பர்.

பிழைகளின் பாரதூரத் தன்மை, இந்நூலாக்கங்கள் குழு முயற்சியாக நடைபெற்றிருக்க முடியாது எனக்கருத இடமளிக்கிறது. எழுத்தாளர் குழு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தத்தமக்கு ஒதுக்கப்பட்ட தலைப்புக்களில் (பாடங்களில்) எழுதிக் கொடுத்துள்ளனர் - அவை ஏனையோரால் பார்வையிடப்படவில்லை என்றே கருத வேண்டியுள்ளது. முழுநூலையும் (09ம் பக்கம் பார்க்க)

## நாவலர் அச்சிட்ட நூல்களின் விசேடம்

"இவர் (நாவலர்) செய்தளவும் அச்சிட்டனவுமாகிய நூல்களிலே சில விசேடங்களுண்டு. அவைகளாவன:

1. பிரதிகளின் ஆதாரமில்லாமல் ஒன்றனையும் தாமாகத் திருத்தாமை .
2. பாட பேதங்களொன்றும் அச்சிடாமை
3. இவர் தமக்கு முன்னிருந்த ஆசிரியர்களது துணையில்லாமல் சித்தாந்தத்திலாவது, இலக்கணத்திலாவது - வேறு எவற்றிலாவது தமது யுத்தியினாலே ஒன்றையும் சொன்னதேயில்லை.

சில வித்துவான்கள் தாம் அச்சிடும் நூல்களிலே பிழைகள் வந்தாலும் 'இனி என்ன நம்முடைய வித்துவான் பண்டிதன் என்னும் பட்டங்கள் போய்விடப்போகின்றனவா" என்பார்கள். இவரோ அப்படிப்பட்டவரல்லர். ஒருநாள், போசனவிதி எழுதும் போது இவர் சொல்லச் சொல்ல அடியேன் எழுதிவந்தேன். அப்போது 'பரிகா முத்திரையைச் செய்து' என்று இவர் சொல்ல அதனை அடியேன் எழுதிவிட்டுச் "சைவசமயநெறியுரையிற் பரிகாரமுத்திரை என்று எழுதியிருக்கிறதாக ஞாபகம் இருக்கிறது" என்றேன். உடனே இவருக்கு உடம்பு முழுதும் வெயர்த்து விட்டது. எழும்பச் சத்தியற்றுப் போய்விட்டது. வேறொருவரைக் கொண்டு சைவசமயநெறியுரையை எடுப்பித்துப் பார்க்க அதிற் பரிகாமுத்திரை என்று சரியாக இருந்தது. புத்தகங்கள் அச்சிடுவதிற் பிழைவருவதைக் குறித்து இவ்வளவு பயம் இவருக்கு இருந்தது. இவர் அச்சிடும் புத்தகங்களிற் பிழைகள் இல்லாமையையும் அவைகள் வாசிப்பவர்களுக்கு இலகுவாயிருத்தலையும் கண்ட திருவாவடுதுறை ஆதீனத்து ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரவர்கள் இவரைக் கூடவிருத்திப் போசனம் பண்ணும் அக்காலங்களிலும் புகழ்ந்து பாராட்டுவார்கள்"

- 'ஆறுமுகநாவலர் சரித்திரம்' என்ற நூலில் திரு. த. கைலாசபிள்ளை

## சைவநெறிப் பாடநூல்கள்

(08ம் பக்கத் தொடர்ச்சி)

அதன் எழுத்தாளர் குழு கூடிக் கலந்துரையாடியதா என்பது சந்தேகத்திற் குரியதாகின்றது.

"பிழைகள் ஏற்பட்டால் நமக்கென்ன? உத்தியோகம் பறிபோய் விடப்போகின்றதா?" என்ற நோக்கிலேயே காரியங்கள் நடக்கின்றதெனக் கருத வேண்டியுள்ளது. அவ்வாறாயின் அது மிகவும் பொறுப்பற்றதுவும் கடுமையாகக் கண்டிக்கப்படவேண்டியதும் தண்டிக்கப் படவேண்டியதுமானசெயலாகும். கருத்துப்பிழைகள், பொருட்பிழைகளுக்கு எழுத்தாளர் குழுக்களும் எழுத்துப் பிழைகளுக்கு ஒப்புநோக்குபவர்களும் விடைதரக் கடமைப்பட்டுள்ளனர்.

பாட ஆலோசனைக் குழுவினர், அப்பதவியைத் தமக்குத் தரப்பட்டவொரு கௌரவம் என்றளவில் திருப்தியடையாது அக் கௌரவத்துடன் ஒரு பொறுப்பும் இணைந்துள்ளது. - நூல்களில் ஏற்படும் அடிப்படைக் கருத்துப் பிழைகளுக்குத் தாமும் பொறுப்பானவர்கள்-என்ற உணர்வுடன் நூல்கள் இறுதிவடிவம் பெறும் போது அவற்றை முழுதுமாக வாசித்துப் பார்ப்பது விரும்பத்தக்கது.

சைவ/இந்து நிறுவனங்கள் அறிக்கை விடுவதிலும் தீர்மானங்கள் நிறைவேற்றுவதிலும் திருப்தி காணாது, கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர், தேசிய கல்வி நிறுவனப் பணிப்பாளர் நாயகம் ஆகியவர்களுடன் தொடர்பு கொண்டு அவர்கள் மூலம் சம்பந்தப்பட்ட அனைவரிடமும் விளக்கம் கோரவும் தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்படவும் இவ்வாறான பிழைகள் இனிவருங்காலத்தில் ஏற்படாது பார்த்துக் கொள்ளக் கூடிய காப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் ஆவனசெய்தல் வேண்டும்.

சைவசமய நூல்களிலுள்ள தவறுகள் பற்றி வெளிக் கொணரப்பட்ட தகவல்களிலிருந்து இன்னுமொரு - அதிகம் சுட்டிக் காட்டப்படாத -சந்தேகமும் எழுகிறது. விஞ்ஞானம், கணிதம், தமிழ், சமூகக் கல்வி போன்ற பாடநூல்களும் இவ்வாறு பிழையான தகவல்களையும் கருத்துக்களையும் எண்ணக்கருக்களையும் எமது மாணவர் மத்தியில் விதைக்கின்றனவா என்பதே அது. இது பற்றியும் வருங்காலச் சந்ததியின் வளர்ச்சி கருதிச் சம்பந்தப்பட்ட உயரதிகாரிகள் ஆராய வேண்டும். ஒவ்வொரு பாடத்திற்குமான பாடநூல்களிலுள்ள குறைபாடுகள் பற்றி ஆராயவும் தவறுகள் ஏற்படாதிருக்கக் கூடிய காப்புகள் மேற்கொள்வதற்கான வழிமுறைகள் பற்றிப் பரிந்துரைக்கவும் தனித்தனிக் குழுக்கள் அமைக்கப்பட்டு அவற்றின் பரிந்துரைகள் முழுமையாக அமுல் செய்யப்படுதல் அவசியம்.

### திருவருணை அருந்தா முலையாய் வருகவே

மருளே ரிடைய பவப்பிணிக்கு மருந்தே வருக வாழ்வளிக்கும்
மணியே வருக மனம் விளக்கும் மதியே வருக குறையாத
பொருளே வருக மாற்றறியாப் பொன்னே வருக பொன்னாய
பூணே வருக வேதாந்தப் பொலிவே வருக சித்தாந்தத்
தெருளே வருக சிவஞானத் தேனே வருக திருவாளர்
தேடி வைத்த பேரின்பத் திரளே வருக சன்மார்க்க
அருளே வருக திருவருணை அருந்தா முலையாய் வருகவே
அலகில் விளையாட் டயருமெங்கள் அம்மே வருக வருகவே.

- உண்ணா முலையம்மை பிள்ளைத்தமிழ்

# புதிய கட்டடத் திறப்புவிழா

(07ம் பக்கத் தொடர்ச்சி)

தலைமை தாங்கிப் பேசிய பேராசிரியர் வை. இரத்தினசபாபதி அவர்கள் ஈழத்துச் சைவமக்கள் ஆற்றிய சைவப்பணிகளை விளக்கி, ஆறுமுகநாவலர் பெருமானின் நூல்களையே தன்னைப் போன்ற வர்கள் முன்பு படித்ததாகக் கூறினார். நாவலரின் இலக்கண நூல்களும் சமய நூல்களும் தமக்கு வாழ்வை நெறிப்படுத்துபவையாக அமைந்தன என்று கூறிய தலைவர், நாவலரின் வாழ்வும் பணியும் சைவமக்களுக்கு இன்றும் வழிகாட்டுபவையாக இருக்கின்றன என்றார்.

வாழ்த்துரை வழங்கிய வழக்கறிஞர் திரு. அ.சம்பந்தம் அவர்கள், ஈழத்தில் தொடரும் யுத்தநிலையால், அங்குள்ள தமிழர் பல இன்னல்களுக்கு ஆளாகினார்கள், பிற நாடுகளுக்கு அகதிகளாகச் சென்றார்கள், ஆயினும் தமது சமயத்தை அவர்கள் கைவிடவில்லை. சென்ற இடங்களிலெல்லாம் சைவத்தை வளர்க்கிறார்கள். மேலை நாடுகளில் இன்று பல சைவக்கோயில்கள் எழுந்திருப்பதும், சைவம் அங்கு பரவுவதும் ஈழத் தமிழரால்தான் எனக்கூறி அவர்களைப் பாராட்டினார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சைவசித்தாந்த கலாநிதியும் பொறியியலாளருமான திரு. க. கணேசலிங்கம் அவர்கள் தமது வாழ்த்துரையில் சைவசமய வளர்ச்சிக்கு ஈழத்தவர் செய்த பங்களிப்பை விளக்கிப் பேசினார். ஞானப்பிரகாசசுவாமிகள், ஆறுமுகநாவலர், காசிவாசி செந்திநாதையர் போன்ற பெருமக்கள் ஈழத்தில் மட்டுமன்றி தமிழ் நாட்டிலும் சைவத்தைப் பேணிப் பாதுகாத்ததை விளக்கினார். சைவம் தூய்மையுடன் வளர்ந்த ஈழ மண்ணில் இன்று சைவத்துக்கு உடன்பாடற்ற கொள்கைகளும் வழிபாடுகளும் புகுந்திருக்கின்றன. இவை தமிழகத்தில் இருந்துதான் அங்கு இறக்குமதி செய்யப்படுகின்றன எனச் சுட்டிக் காட்டினார். இந்த அவல நிலையை மாற்றுவதற்குத் தமிழக சைவ அறிஞர்களும் நிறுவனங்களும் உடனடியாகச் செயற்படவேண்டும் என வலியுறுத்தினார். அழகுற அமைந்து இன்று திறப்பு விழாக் காணும் புண்ணியநாச்சி அம்மையார் மடம், யாத்திரிகர்களின் தங்கு மடமாக மட்டுமன்றி, சைவநெறி பரப்பும் நிறுவனமாகவும் இயங்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்த அவர், மடத்தின் மண்டபம் இதற்கு ஏற்றதாக அமைந்துள்ளதைச் சுட்டிக்காட்டினார்.

சித்தாந்த கலாநிதி கணேசலிங்கத்தின் உரைக்குப் பதிலுரை போல், தலைமைதாங்கிய பேராசிரியர் சில விளக்கங்களைக் கூறினார். தமிழகத்தில் நிகழ்பவை ஈழத்திலும், ஈழத்தில் நிகழ்பவை தமிழகத்திலும் சில தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. இவை தவிர்க்க முடியாதன என்றார் அவர்.

கட்டட அமைப்பை மேற்பார்வை செய்த பொறியியலாளரைச் சைவபரிபாலன சபையின் புண்ணியநாச்சி அம்மை மட நிர்வாகத்துக்கான பிரதிநிதியும் புதிய கட்டடத்தைக் கட்டி முடிக்கப் பெரிதும் உழைத்தவருமான திரு.வி.இராமநாதன் அவர்கள் கௌரவித்தார்.

சைவபரிபாலன சபையின் மூத்த உறுப்பினர்களுள் ஒருவரும் முன்னாட் செயலாளரும் சிதம்பரத்தில் பல தடவைகள் நெடுநாட் தங்கியிருந்து கட்டட வேலைகளைக் கவனித்து ஆவன செய்தவருமாகிய திரு.த.சண்முகலிங்கம் அவர்கள் தமது நன்றியுரையில் சைவபரிபாலன சபையினதும் புண்ணிய நாச்சியம்மை திருமடத்தினதும் கடந்தகாலச் செயற்பாடுகளை விளக்கியதுடன், புதிய கட்டடத்தைக் கட்ட நிதியுதவியளித்தவர்களையும் துணை நின்றவர்களையும் போற்றிப் பாராட்டினார்.

அர்ப்பணிப்புடன் செயற்பட்டுக் கட்டட வேலைகளைக் குறுகிய காலத்தில் செய்வித்து முடித்ததற்காக திரு.த. சண்முகலிங்கம், திரு.வி.இராமநாதன் ஆகியவிருவரையும் விழாவிற்குச் சமுகமளித்திருந்தோர் பாராட்டி வாழ்த்தினர். விழாவிற்கு வருகை தந்திருந்த அனைவருக்கும் இரவு உணவு பரிமாறப்பட்டது.

(சிதம்பர நிருபர்.)

### அண்ணாமலையானைப் பாடுதுங்காண்

விண்ணாளும் தேவர்க்கு மேலான வேதியனை
மண்ணாளும் மன்னவர்க்கு மாண்பாகி நின்றானைத்
தண்ணார் தமிழளிக்கும் தண்பாண்டி நாட்டானைப்
பெண்ணாளும் பாகனைப் பேணு பெருந்துறையில்
கண்ணார் கழல்காட்டி நாயேனை ஆட்கொண்ட
அண்ணா மலையானைப் பாடுதுங்காண் அம்மானாய்

– மாணிக்கவாசகர்

### "சக்தி இல்லம்" திறப்பு விழா

அகில இலங்கை இந்துமாமன்றத்தினர் "சக்தி இல்லம்" என்ற பெயரில் இளவயது மாணவிகளுக்கான இலவச விடுதியும் முதியோர் பராமரிப்பு இல்லமும் இணைந்த ஒரு வாழ்வகத்தை கொழும்பு இரத்மலானையில், இரத்மலானை கொழும்பு இந்துக் கல்லூரிக்கு அண்மையில் அமைத்துள்ளனர். இவ்வில்லத்தின் திறப்பு விழா 09.06.2002 ஞாயிற்றுக்கிழமை சிறப்புடன் நடைபெற்றது. கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் வணக்கத்திற்குரிய சுவாமி ஆத்மகணானந்தாஜி இல்லத்தைத் திறந்து வைத்தார்.

நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் அகில இலங்கை இந்து மாமன்றத்தினரால் இரத்மலானை கொழும்பு இந்துக் கல்லூரியில் நாற்பது மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட ஆண்பிள்ளைகளுக்கான இலவச விடுதி படிப்படியாக வளர்ச்சி கண்டு இன்று நூறு மாணவர்களை வைத்துப் பராமரிக்கும் நிலைக்கு உயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# செய்தித் தொகுப்பு

**தமிழகத் தமிழறிஞர்கள் வருகை:**

ஈழத் தமிழர்களின் துயர் காண் விஜயமொன்றை மேற்கொண்டு தமிழகத் தமிழறிஞர்கள் ஐவர் 01.06.2002 ஆம் நாள் பிற்பகல் யாழ்ப்பாணம் வந்திருந்தனர். முனைவர் தமிழப்பன் (சென்னை) அவர்களும் திரு. அ. கருணை தாசன் (திருச்சி) அவர்களும் சைவ பரிபாலன சபைத் தேர்வுச் செயலர் இல்லத்தில் தங்கினர். திருவாளர்கள் குரு. ஆறுமுகம் (சேலம்), துரை இராமநாதன் (சென்னை), ந. கணேசன் (புதுச்சேரி) ஆகிய மூவரும் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் தங்கவைக்கப்பட்டனர்.

02.06.2002ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்திற்குச் சென்று வழிபட்டபின் யாழ் திரும்பிய அறிஞர்கள், அன்று மாலை 5மணியளவில் நல்லை ஆதீனத்தில் பத்திரிகையாளர் மாநாடொன்றை நடத்தினர்.

03.06.2002ஆம் நாள் மாவிட்டபுரம், கீரிமலை, நகுலேஸ்வரம், தெல்லிப்பழை துர்க்கையம்மன் கோவில் ஆகியவிடங்களுக்குச் சென்று வழிபட்டபின் மக்களிடம் அவர்களது பிரச்சனைகளைக் கேட்டறிந்து கொண்ட குழுவினர், துர்க்கையம்மன் தேவஸ்தானத்தில் மதிய உணவை முடித்துக் கொண்டு யாழ் திரும்பி, அன்றுமாலை ஐந்து மணியளவில் நல்லையாதீன கலையரங்கில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றினர். அங்கு நல்லை ஆதீன முதல்வரால் கௌரவிக்கப்பட்டனர்.

04.06.2002 செவ்வாய்க்கிழமை முற்பகல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு விஜயம் மேற்கொண்ட குழுவினர் அங்கு பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், ஆய்வாளர்களுடன் கருத்துப்பரிமாறிக் கொண்டனர். பல்கலைக்கழக நூல்நிலையத்தையும் பார்வையிட்டனர். பிற்பகல் யாழ்ப்பாணத் தமிழ் அறிஞர்கள் சிலருடனான சந்திப்பு இடம் பெற்றது. மாலை ஐந்துமணியளவில் வண்ணார்பண்ணை நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சைவபரிபாலனசபை ஆதரவில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றினர்.

05.06.2002 புதன்கிழமை யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிக்குப் பயணித்தார்கள். இத் தமிழறிஞர்களின் யாழ் விஜயத்திற்கான நிகழ்ச்சி ஒழுங்குகளையும் விருந்தோம்பல் ஒழுங்குகளையும் நல்லை ஆதீன ஆதரவுடன் யாழ் சைவபரிபாலனசபை உபதலைவரும் தேர்வுச் செயலாளருமாகிய சைவபூஷணம் சைவப்புலவர் வ.கந்சாமி அவர்கள் மேற்கொண்டிருந்தார்.

**கம்பராமாயணக்காட்சிகள் - II நூல் அறிமுகவிழா.**

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் நூற்றுமூன்றாவது பிறந்த தினத்தை முன்னிட்டு அன்னார் எழுதிய கம்பராமாயணக் காட்சிகள்- II என்ற நூல் 30.06.2002ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் நடைபெறவிருக்கும் விழாவில் அறிமுகம் செய்து வைக்கப்படவுள்ளது. பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபைத் தலைவர் பண்டிதை பொன். பாக்கியம் அவர்கள் தலைமையில் நடைபெறும் விழாவில் மயிலங்கூடலூர் பி.நடராஜன் அவர்கள் நூல் அறிமுகவுரையை நிகழ்த்துவார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை வெளியீட்டுச் சபைக் காரியதரிசி ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் அவர்கள் மேற்கொண்டுள்ளார். 230 பக்கங்களைக் கொண்ட இந்நூலின் விலை 200/=

**சைவப்புலவர் சங்கத்தின் நாற்பத்திரண்டாவது ஆண்டு நிறைவு விழாவும் பட்டமளிப்பு விழாவும்:**

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கத்தின் நாற்பத்திரண்டாவது ஆண்டு நிறைவு விழாவும் பட்டமளிப்பு விழாவும் 16.06.2002 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை காலை ஒன்பது மணியளவில் வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் சங்கத் தலைவர் சைவப் புலவர் திரு.மு.திருஞானசம்பந்த பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஆலயவழிபாடு, மங்களவிளக்கேற்றல், வரவேற்புரைகளைத் தொடர்ந்து நல்லை ஆதீன இரண்டாவது குருமகா சந்நிதானம் அவர்கள் அருளுரை வழங்கினார்கள்.

தலைமை உரையைத் தொடர்ந்து புராணபடனப் போட்டியில் முதலாமிடத்தைப் பெற்ற தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவர்களும் பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை மாணவிகளும் புராணபடனஞ் செய்தனர். அதனைத் தொடர்ந்து அகில இலங்கைச் சைவப் புலவர் சங்க வரலாற்று நூல் வெளியீடு இடம்பெற்றது. நூலை யாழ்.பல்கலைக்கழகக் கலைப்பீடாதிபதி பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர் வெளியிட்டு வைத்தார். முதற் பிரதியை விழாவுக்குப் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் பெற்றுக் கொண்டார்.

சைவப்புலவர் சங்க உப தலைவர் சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்கள் நூலை அறிமுகம் செய்து வைத்தனர். 2001ஆம் ஆண்டில் நடைபெற்ற இளஞ் சைவப்புலவர், சைவப்புலவர் தேர்வில் சித்தியடைந்தோர்களுக்கான பட்டமளிப்பும் புராணபடனப் போட்டியில் பரிசு பெற்றோருக்கான பரிசளிப்பும் நடைபெற்றபின் விழா தேவார பாராயணத்துடன் இனிது நிறைவுற்றது.

**வருந்துகிறோம்**

இட நெருக்கடி காரணமாக பிரசுரிக்கவிருந்த திருவண்ணாமலை பற்றிய சிறப்புக் கட்டுரையைப் பிரசுரிக்க முடியவில்லை. மகேஸ்வர வடிவங்கள் என்ற தொடர் கட்டுரை, மாணவர் பகுதி ஆகியனவும் இடம்பெற வில்லை. அடுத்த இதழில் இவை பிரசுரமாகும்.

# சைவ பரிபாலனசபை

(5ம் பக்கத் தொடர்ச்சி)
செயல்களை எடுத்துக் கூறும் ஒரு பத்திரத்தையும் வழங்கியது. எக்சாமினர் (Examiner) என்னும் பத்திரிகையின் ஆசிரியர் லுலோட விசி தனது பத்திரிகைப் பலம் முழுவதையும் சனங்களுக்காக உபயோகித்தார். ஆனால் இவை ஒன்றும் பயன்படவில்லை. இந்த எதிர்ப்பின் பயன் அரசாங்க அதிபரின் அதிகாரம் கூடியதே. அவர் பதவிக்காலத்தின் முற்பகுதியில் அரசாங்க தாபனங்களெல்லாம் சீர்கேடான நிலையில் இருந்தன. அரசாங்க அதிபரின் சர்வாதிகாரம் தலை விரித்தாடியது. அரசாங்க அதிபருக்கு எதிரான நடவடிக்கை எடுத்தல் அரசாங்க உத்தியோகத்திலிருக்கும் நாகலிங்கம் அவர்களின் உறவினர்கட்கு பாதகமாக இருக்கும். நாகலிங்கம் அவர்கள் தனது சுயநலத்தையோ அல்லது உறவினர் நலத்தையோ கருதினால் அரசாங்க அதிபரை எதிர்க்காமல் இருக்கவேண்டும். நாகலிங்கம் எதிர்க்காமல் அல்லது நொதுமலாக இருந்திருந்தால் அவருக்கும் அவருடைய உறவினருக்கும் பெரும் பதவிகள் கிடைத்திருக்கும். உண்மைத் தேசாபிமானியான நாகலிங்கம் இப்பதவிகள் ஒன்றையும் பொருட்படுத்தவில்லை. இதற்கு மாறாகத் தனக்குள்ள குடும்பச் செல்வாக்கு முழுவதையும் தேச நன்மைக்காகவே உபயோகித்தார். ஆகவே யாழ்ப்பாணத்தில் இவர் "எதிர்க் கட்சித் தலைவர்" ஆனார். இவர் 1884 ஆம் ஆண்டு தொடக்கம் அரசாங்க அதிபருக்கு எதிராகப் பல கிளர்ச்சிகளை முன்னின்று நடத்தி அவற்றில் வெற்றி கண்டார்.

நாகலிங்கம் அவர்களின் ஆயுள் குறைவாக இருந்த போதிலும் அதற்குள் தனது முக்கியமான இலட்சியங்களை நிறைவேற்றி விட்டார். இதில் முக்கியமானது வடமாகாண நிர்வாகத்தில் ஏற்படுத்திய சீர்திருத்தங்கள் ஆகும்.

"கீழைத் தேசங்களிலுள்ள அரசியல்வாதிகள் பேருக்கும் புகழுக்குமாக அல்லது தம்மைச் சிறுமைப்படுத்தியவருக்கு எதிராகவே அரசியலிலும் பொது வாழ்விலும் ஈடுபடுவர்." என்று மேல் நாட்டவர் கருதி வந்தனர். இக்குறைகள் ஒன்றும் நாகலிங்கம் அவர்களைப் பொறுத்தவரையிற் பொருந்தா. அவர் சேவைகள் எல்லாம் பொதுமக்களின் நன்மை கருதித் தூய்மையான முறையிற் செய்யப்பட்டவை ஆகும். அவர் செய்த சேவைகளெல்லாவற்றிலும் மேற்கூறப்பட்ட அம்சங்களைக் காணலாம்.

நாகலிங்கம் அவர்கள் வாழ்க்கையில் நிகழ்ந்த சம்பவங்கள் எல்லாவற்றையும் இங்கு கூற இடந்தராது. அவர் செய்த முதல் சீர்திருத்தம் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி பற்றியதாகும். இவருடைய முயற்சியினால் தகுதியான டாக்டர் ஒருவர், இந்த ஆஸ்பத்திரிக்கு நியமிக்கப்பட்டார். இவர் இரு தூதுக் குழுவுக்கு தலைமை தாங்கித் தேசாதிபதியிடம் சென்றார். ஒன்று மாகாண நிர்வாகச் சீர்திருத்தம் பற்றியது. மற்றையது திரு. குமாரசாமியை இலங்கைத் தமிழர் பிரதிநிதியாகச் சட்ட நிரூபண சபைக்கு நியமிப்பது பற்றியது. குமாரசாமியை நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கை இவராற் சமர்ப்பிக்கப்பட்டது. இதில் வெற்றி கண்டார். நிர்வாகம் பற்றிய கோரிக்கை கவர்ணருக்கு மாத்திரம் அல்லாமல் லண்டனிலுள்ள குடியேற்ற நாடுகளுக்கு பொறுப்பாயிருந்த செயலாளருக்கும் அனுப்பப்படவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

குடியேற்ற நாட்டுச் செயலாளருக்கு அனுப்பிய பத்திரத்தில் சேர். உவில்லியம் துவைனத்தின் நிர்வாகச் சீர்கேடுகள் எடுத்துக்காட்டப்பட்டு அவரை ஓய்வு பெறச் செய்ய வேண்டும் என்று கேட்கப்பட்டது.

**'தேசாதிபதியை எதிர்த்த அஞ்சா நெஞ்சன்'**

தேசாதிபதி சேர் ஆர்தர் கோர்ட்ன் இலங்கையை விட்டுப் போகும் பொழுது அவருக்கு பிரியாவிடைப் பத்திரம் ஒன்று யாழ்ப்பாண மக்கள் சார்பாக வழங்குவது பற்றி ஆலோசிப்பதற்கு யாழ்ப்பாணம் பெரிய கோட்டு மண்டபத்தில் ஒரு கூட்டம் கூடியது. இவர் யாழ்ப்பாணத்திற்கு ஒன்றுமே செய்யவில்லை. இதற்கு மேலாக யாழ்ப்பாணத்து மக்களை இழிவுபடுத்தி குடியேற்ற நாட்டு மந்திரிக்கு அறிக்கையொன்றும் சமர்ப்பித்தார். மக்கள் கூறிய குறைகளை விசாரிக்காதபடியால் அரசாங்க உத்தியோகத்தர்கள் தொடர்ந்து நிர்வாகத்தைச் சீர்கெட்ட முறையில் நடத்தி வந்தனர். நாகலிங்கம் அவர்கள் சில மக்களைத் தம்மோடு சேர்த்துக் கொண்டு வாழ்த்துப் பத்திரம் வழங்குவதை எதிர்ப்பதற்கு கூட்டம் நடத்தும் இடத்துக்குப் போனார். நாகலிங்கத்தாரும் மக்களும் வருவதைக் கண்ட கூட்டத்தை ஒழுங்கு செய்தவர்கள் தாங்கள் எடுத்த முயற்சி நிறைவேறாது என அறிந்து மண்டபத்தை விட்டு வெளியேறினர். இவர்கள் சென்ற பின் அங்கு நின்ற மக்கள் நாகலிங்கத்தாரை தலைவராகத் தெரிந்தார்கள். அவர் சேர். ஆர்தர் கோர்ட்டனுடைய ஆட்சியைக் கண்டித்து ஓர் ஆவேசமான சொற்பொழிவை நிகழ்த்தினார். இத்தேசாதிபதி ஒரு பிரியாவிடைப் பத்திரத்தைப் பெறுவதற்குத் தகுதி அற்றவர் என்னும் பிரேரணை அக்கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது. ஆகவே நாகலிங்கம் அவர்கள் பாராட்டுப் பத்திரம் அனுப்புவதைத் தடைசெய்தது மாத்திரமல்லாமல் ஒரு கண்டனப் பிரேரணையையும் நிறைவேற்று வித்தார். இந்தக் கூட்ட நடவடிக்கைகள் கொழும்பு பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டன. இதனால் யாழ்ப்பாணத்து மக்கள் கூறுங்குறைகளை அலட்சியம் செய்ய முடியாது என்பதை அரசாங்கத்தோடு சம்பந்தப்பட்டவர்கள் நன்கு அறிந்தனர். அரசாங்க உத்தியோகத்தர்கள் தமது போக்கைமாற்றி மக்களின் குறைகளை நிவர்த்தி செய்யத் தொடங்கினர்.

**தேச பக்தன்**

இதன் பின்னர் 1890 ஆம் ஆண்டு புதிய தேசாதிபதியான சேர் ஆர்தர் கவலக் என்பவரைப் பேட்டி கண்டு யாழ்ப்பாணத்து மக்களின் குறைகளை அவருக்கு எடுத்துரைத்தனர். இத் தேசாதிபதி வந்த பின்னரும் குடியேற்ற மந்திரிக்கு மனுக்கள் அனுப்பிக்கொண்டு வந்தார். தேசாதிபதி, கண்டனங்களைப் பொருட்படுத்தாது, அவருடைய தூதுக் குழுவை

(13ம் பக்கம் பார்க்க)

# சைவ பரிபாலன சபை

(12ம் பக்கத் தொடர்ச்சி)

வரவேற்றார். இவற்றுக்கு மேலாக இருமுறை நாகலிங்கம் அவர்களை முறையே சாவகச்சேரிக்கும் பருத்தித்துறைக்கும் தற்காலிக நீதிபதியாக நியமித்தார். நாகலிங்கம் அவர்களின் தகுதியையும் நேர்மையையும் உணர்ந்தே அவருக்குத் தேசாதிபதி இந்த நியமனத்தைக் கொடுத்தார். நாகலிங்கம் அவர்களும், பொருள் வருவாயைக் கருதாது, அரசாங்கத்தைத் கண்டித்தாலும் தகுதியானவர்களுக்கு உயர்பதவிகள் கிடைக்கும் என்பதைக் காட்டுவதற்கே அந்த நியமனங்களை ஏற்றார். நாகலிங்கம் அவர்களின் தேசாபிமானம் கல்கத்தாவில் படிக்கும் போதே கால் கொண்டது. அங்கு சிறந்த தேசாபிமானியான பாபு சுரேந்திரநாத் பனர்ஜி முதலிய இந்தியத் தலைவர்களின் பேச்சுக்களைக் கேட்கும் வாய்ப்புக் கிடைத்தது. இதனால் இந்திய காங்கிரஸிற் பரபிமானங் கொண்டார். இதனால் அலகபாதில் நடந்த காங்கிரஸ் மகாநாட்டிற்கு அதிசிரமப்பட்டுச் சென்றிருந்தார்.

### புகையிரத சேவை

யாழ்ப்பாணத்துக்குப் புகையிரதத்தைக் கொண்டுவருவதற்கு இவர் தீவிரமாக உழைத்தார். இந்த இயக்கத்தை இறக்கும் வரைக்கும் நடத்தி வந்தார். இவர் யாழ்ப்பாணத்துக்குப் புகையிரதம் கொண்டுவர வேண்டும் என்ற சபைக்குத் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். இதற்கு முன் இச் சபைக்குத் தலைவர்களாக ஐரோப்பியர்களே இருந்து வந்தனர். இவர் இறக்கு முன் புகையிரதத்தை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவர அரசாங்கம் தீர்மானித்து விட்டது என்று தேசாதிபதி கொழும்பில் ஒரு கூட்டத்தில் கூறினார். அநீதிகளையும் நிர்வாகச் சீர்கேடுகளையும் கண்டிக்கும் போது தீவிரமாகப் பேசுவார் - உழைப்பார். ஆனால் சாதாரண வேளைகளில் மிகவும் பணிவாகவும் சாந்தமாகவும் நடந்து கொள்வார். தனிப்பட்ட முறையில் ஒருவரையும் தாக்கிப் பேசார். இதனால் விரோதிகள் இவருக்கில்லை என்று கூறலாம். இவர் அரசாங்கத்தின் பிழைகளைச் சுட்டிக்காட்டிய போதிலும் அரசாங்கத்துக்கு விரோதி அல்லர். இவர் தமது கிளர்ச்சிகளை எல்லாம் சட்ட வரம்புக்குள் நின்றே ஆற்றினார். விக்ரோறியா ராணியின் பொன் விழாவை தாமே முன்னின்று நடத்தினார். ராணியின் பொன்விழாவைக் குறிக்கும் முகமாக "விக்ரோறியா வாசிகசாலை" என்னும் ஸ்தாபனத்தை வண்ணார்பண்ணையில் நிறுவினார். ராணியின் வைர விழா யாழ்ப்பாணத்திற் கொண்டாடப்பட்ட பொழுது இவர் சுகயீனங்காரணமாக அதிற் பங்குபற்ற முடியவில்லை.

இதுவரையில் நாம் இவரை தேசாபிமானியாகவும் மக்களின் உரிமைகளுக்கு உழைத்தவராகவும் கண்டோம். இச் சேவைகளுக்காக அவர் ஞாபகத்தை என்றும் யாழ்ப்பாண மக்கள் போற்றிப் பாதுகாக்கக் கடைமைப்பட்டுள்ளனர்.

### கல்வி சமயப் பணிகள்

சமயத்துறையில் இவராற்றிய பணிகளைக் கவனிப்போம். இத்துறையில் அவர் பரோபகாரமும் விடா முயற்சியும், நிர்வாகத் திறமையும் வெளிப்படையாகக் காணக்கூடியதாக இருந்தது. சைவ பரிபாலனசபை, இந்துசாதனம் (தமிழும் ஆங்கிலமும்) யாழ். இந்துக்கல்லூரி முதலியவற்றை நிறுவுவதற்கு அரும்பாடுபட்டு உழைத்தார். இவை தோன்றுவதற்கு இவரே உயிர்நாடியாக இருந்தார். இவருக்கு முன் சைவபரிபாலன சபை ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் இவரே அதற்குப் புத்துயிர் கொடுத்தவர். திரு. செல்லப்பாபிள்ளை, திரு. சேர்.பொன்.இராமநாதன், கனம் குமாரசாமி முதலியோர் சைவபரிபாலன சபைத் தலைவர்களாக இருந்த போதிலும் கடைசியாகக் கூறப்பட்ட இருவரும் கொழும்பு வாசிகளாக இருந்தபடியால் பத்து வருடங்களுக்கு மேல் உபதலைவராக திரு. நாகலிங்கம் அவர்களே சபைக் கூட்டங்களுக்குத் தலைமை வகித்து நடத்தினார். இறக்கும் வரைக்கும் இந்துசாதனத்தின் ஆங்கிலப் பகுதிக்கு கௌரவ ஆசிரியராக இருந்தார். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியை ஸ்தாபித்தவர்களில் இவர் முக்கியமானவராவார். நான்கு இந்தியப் பட்டதாரிகள் உட்பட திறமையான ஆசிரியர்களை நியமனஞ் செய்தார். இவர் காலத்தில் நானூறு பிள்ளைகள் பள்ளிக்கூடத்திற் படித்தனர். பலர் இக்கல்லூரிக்கு அரசாங்க உதவி கிடையாது என்று எண்ணினர். நாகலிங்கம் அவர்கள் விடாமுயற்சியினாலும் அவர் செல்வாக்கினாலும் அரசாங்கத்திடம் இருந்து உதவிப் பணம் பெற்றதோடு இக் கல்லூரியை கல்கத்தா சர்வகலாசாலையோடு இணைப்பதற்கு அனுமதியும் பெற்றார். இவற்றையெல்லாம் திரு. நாகலிங்கம் அவர்கள் தனித்துநின்று செய்தார் என்று எண்ணக்கூடாது. இந்து சாதன ஆங்கிலப் பகுதிக்கு திரு.நாகலிங்கம் அவர்களின் மைத்துனர் உயர் நீதிபதி T.செல்லப்பாபிள்ளை ஆசிரியராக இருந்தார். இவரைப் போன்ற பெருமக்களின் உதவியும் சகாக்களின் உழைப்பும் தாராளமாகக் கிடைத்தன. பல்வேறு திறப்பட்ட மக்களை ஒன்று சேர்த்து செயலாற்றும் திறமை இவரிடம் காணப்பட்டமை சிறந்த குணமாகும். சுயநலமே அற்பமேனும் இவரிடம் இருந்திருந்தால் இவர் எடுத்த கருமங்கள் வெற்றிகரமாக முடிந்திருக்க முடியாது. பொதுவாக மக்கள் எடுக்கும் கருமங்கள் சில காலத்தில் அழிந்துவிடும். சைவ பரிபாலனசபை, இந்துசாதனம், இந்துக்கல்லூரி முதலிய ஸ்தாபனங்கள் நிலைத்து இருப்பதற்குக் காரணம் திரு. நாகலிங்கம் அவர்களின் தன்னலமற்ற சேவையே. இவர் நோய்வாய்ப்பட்டு மிகவும் மெலிவுற்றிருந்த நேரத்தில் இந்த இரங்கலுரையை எழுதுபவர் அவரைச் சந்திக்க நேர்ந்தது. அவர் சைவபரிபாலன சபை, இந்துக் கல்லூரி, இந்துசாதனம் செவ்வனவே நடைபெறுகிறதா என்று கேட்டார். நான் அதற்கு "தங்கள் சகாக்களான பெருந் தலைலவர்கள் அவற்றைத் தளரவிடாமல் தங்கள் முன்மாதிரியைப் பின் பற்றி செவ்வனே நடத்தி வருகிறார்கள்." என்று கூறினேன். இது அவருக்கு பெருமகிழ்ச்சியைக் கொடுத்தது. இந்த ஸ்தாபனங்களைச் செவ்வனே நடத்தி நாகலிங்கம் அவர்களும் அவருடைய சகாக்களும் தமிழர்களும் சிறப்பாக சைவர்களும் பொதுத் தாபனங்களைச் சிறப்பாக

(14ம் பக்கம் பார்க்க)

## சைவ பரிபாலன சபை

(13ம் பக்கத் தொடர்ச்சி)

நடக்க ... முடியும் என்பதைக் காட்டிவிட்டனர். நாகலிங்கம் சிறந்த இந்துவாக இருந்த போதிலும் பரந்த மனப்பான்மை உடையவராய் இருந்தார். பல கிறிஸ்தவ ஸ்தாபனங்களுக்குப் பண உதவி செய்தார். பல அனாதைப் பிள்ளைகள் இவரிடம் பண உதவிபெற்றுக் கல்வி கற்று முன்னேறினர். அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்த அப்புக்காத்துமாரில் இவரே சிறந்தவராகக் கருதப்பட்டார். பல பொது வேலைகளில் ஈடுபட்ட போதிலும் தன்னிடம் வரும் வழக்குகளைத் திறமையான முறையில் ஆயத்தஞ் செய்தார். இவற்றுக்கெல்லாம் எப்படி நேரம் கிடைத்ததென்று மக்கள் ஆச்சரியப்பட்டனர். சுப்பிறிங்கோட்டு வழக்குகளுக்கு கொழும்பில் இருந்த அப்புக்காத்துமார் வருவது வழக்கம். நாகலிங்கம் அவர்கள் வந்த பின்னர் பலர் அவரையே கொழும்பில் இருந்து வருபவரிலும் பார்க்க சிறந்தவர் எனக் கருதி அவரிடம் தங்கள் வழக்குகளை ஒப்படைத்தனர். இலங்கையில் உள்ளசிறந்த பேச்சாளருள் நாகலிங்கமும் ஒருவராகக் கருதப்பட்டார். மன்னாருக்கு ஒரு வழக்குக்கு விசேடமாக அழைக்கப்பட்டார். அங்கு போன இடத்தில் சேமித்து வைத்த மழை நீரிற் குளித்தபடியால் குளிர் ஏற்பட்டு சுவாசப் பையைத் தாக்கிவிட்டது. அவர் கடைசியாகப் பங்கு பற்றிய கூட்டம் சுவாமி விவேகானந்தரை வரவேற்ற கூட்டமாகும். 1897 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 5ஆம் தேதி காலமானார். மரணச்சடங்கிற்கு வந்திருந்தோர் எல்லோரும் கண்ணீர் விட்டுக் கலங்கினர். அன்று பெரிய கோடு முடப்பட்டது. அப்புக்காத்து அழகக்கோன் என்பவரே கோட்டை முடி நாகலிங்கம் அவர்கட்கு மரியாதை செய்ய வேண்டுமென்று கூறினார். அதனை பெரிய கோட்டு நீதிபதியும் ஏற்றுக் கொண்டார்.

நாகலிங்கம் அவர்கள் 1855 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் தோன்றினார். இவருடைய மனைவி றொக்வூட் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் இளம் மனைவியையும் நான்கு பெண்குழந்தைகளையும் விட்டுச்சென்றுள்ளார். இவர்களுடைய பரிதாப நிலை கண்டு பலர் அனுதாபப்பட்டனர்". இக்கட்டுரையை மனக்கலக்கத்துடன் தான் ஒருவாறு எழுதி முடித்ததாக இவ்விரங்கல் உரையை எழுதிய ஆங்கில இந்துசாதன (Hindu Organ) அந்நாள் ஆசிரியர் கூறியிருந்தார்.

(தொடரும்.)

## சைவ சமய பாட ஆசிரியர்களுக்கு நடத்தப்பட்ட சமய பாடக் கருத்தரங்குகள்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் தேர்வுப்பகுதியினர் கல்வித் திணைக்களத்தித்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட பாடசாலைகளில் ஆறாம் தரம் முதல் பதினொராம் தரம் வரை சைவசமயபாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு சமயபாடக் கருத்தரங்குகளை நடத்தினர். வலய ரீதியாக நடத்தப்பட்ட இக்கருத்தரங்குகளை மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் திரு.சி.சிவராசா அவர்களின் அனுமதியுடனும் அவ்வவ் வலயக் கல்விப் பணிப்பாளர்களின் அனுசரணையுடனும் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைத் தேர்வுச் செயலாளர் சைவபூஷணம் சைவப் புலவர் திரு. வ. கந்தசாமி அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார்.

*யாழ் கல்வி வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு 03.06.2002 ஆம் நாள் யாழ் இந்து மகளிர் கல்லூரியிலும்,

*வடமராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு 07.06.2002ஆம் நாள் பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்திலும்,

*தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு 10.06.2002 ஆம் நாள் யாழ் இந்துக் கல்லூரியிலும்,

*தீவகக் கல்வி வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு 12.06.2002 ஆம் நாள் வேலணை சேர். வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயத்திலும் ,

*வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு 14.06.2002 ஆம் நாள் மருதனார்மடம் இரமநாதன் கல்லூரியிலும் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன.

அவ்வவ் வலயக் கல்விப் பணிப்பாளர்களின் தொடக்கவுரையுடன் ஆரம்பித்த கருத்தரங்குகளில்

▸ தரம் ஆறு முதல் பதினொன்று வரையான சைவசமய பாடநூல்களில் உள்ள குறை நிறைவுகள் பற்றி இளைப்பாறிய அதிபர் சைவப்புலவர் திரு. சு. செல்லத்துரை அவர்களும்,

▸ சைவசமய பாடம் கற்பித்தல் குறித்து இளைப்பாறிய அதிபர் திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் அவர்களும்,

▸ சைவசமய பாட ஆசிரியர்களின் வாண்மை பற்றி இளைப்பாறிய அதிபர் திரு.மு. திருஞானசம்பந்தபிள்ளை அவர்களும்,

▸ சைவ சமய பாடக் கணிப்பீடு பற்றிக் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் திரு. செல்லையா திருநாவுக்கரசு அவர்களும்,

▸ சைவசமய பாடம் கற்பிப்பதில் உள்ள பிரச்சனைகளும் தீர்வுகளும் என்ற பொருளில் பலாலி ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் திரு.சிவ.மகாலிங்கம், பெரியபுலம் மகாவித்தியாலய அதிபர் செல்வி அ.கந்தையா ஆகியோரும் கருத்துரை வழங்கினர். பெருந்தொகையான ஆசிரியர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

இக்கருத்தரங்குகளில் சைவநெறிப் பாடநூல்களில் (தரம் 6-11) அவதானிக்கப்பட்ட ஏராளமான தவறுகள் சுட்டிக் காட்டப்பட்டன. இவ்வாறு காணப்பட்ட தவறுகளையும் அவற்றின் திருத்தங்களையும் தொகுத்து **சைவநெறிப் பாடநூல்கள் (6-11) தவறுகளும் திருத்தங்களும்** என்ற தலைப்பில் பன்னிரண்டு பக்கங்களைக் கொண்ட கைநூலாகச் சைவ பரிபாலன சபையின் தேர்வுப் பகுதியினர் வெளியிடுள்ளமை பாராட்டப்பட வேண்டியதோர் செயற்பாடாகும்.

# SAIVAISM

(Continued from page 16)

Umapathi Sivam, are authors of the other Siddhanta works. All these authors are considered to be the four great Santhanac - haryas of Saivaism. They form the outer group, (Puram) as distinguished from the Inner group, (Aham) who are Nandi Devar, Sanatkumarar, Satyagnana Darsini and Paranjothi, who gave initiation to Meikandar.

As against the four Santhana - charyas, we have four great Acharyas known as Samaya - charyas, - Gnanasambhandhar, Appar, Sundarar and Manic - kavasagar, who composed the Saiva Psalms, Prayers and Praises. They flourised long before the Theologians referred to above, and did the pioneer work for resuscitating Saivaism. Their poems are the treasure - chests of Vedic truths and Agamic principles, in melodious language and spontaneous rhythm. The true spiritual literature is really from these four religious geniuses, and what the theologians did was the preparation of the grammar thereof. Appar was the senior contemporary of Sambhandhar, 'the marvellous boy who died in the prime'. It was the latter who gave the name of Appar, who was known, and is even today known, as Thiruna - vukkarasar. 'Appa' means in Tamil father. These four Saints (Appar, Sambhandhar, Sundarar and Manickavasagar) are exponents of the four paths of salvation in Saivaism, namely, dasa - marga ( the path of the servant ), Sat -Putra - Marga ( the path of the good son), Sakha - marga ( the path of the friend) and San - marga ( the true path or the path of the lover and the beloved). These paths are also known as Sariya, Kriya, Yoga and Gnana. They should not be confused with the four Yogas.

*(to be continued)*

## சைவப்பெரியார் புலோலியூர் சிவபாதசுந்தரனார்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

*முதுகலைத் தத்துவமாணி (MA) பரீட்சை எழுதுபவர்களுக்கு ஒரு பாட நூலாக ஆக்கப்பட்டுள்ளது.*

"The Shaiva School of Hinduism" *(இந்து சமயத்தில் சைவக் கோட்பாடுகள்) என்ற அவரது ஆங்கில நூல், மேற்குலக வாசகர்களின் தேவையைப் பூர்த்தி செய்ய எழுதப்பட்டு இங்கிலாந்தில் பிரசுரிக்கப்பட்டதாயினும், சைவ சித்தாந்தத்தை ஆங்கிலமொழி மூலம் அறிந்துகொள்ள விரும்பும் சைவசமயிகளுக்கும் அது ஒரு மிகச் சிறந்த கைநூலாக விளங்கு கிறது. இந்நூல் மேல்நாட்டு புல மையாளர்களிடையே பெரும் மதிப் பையும் பாராட்டையும் பெற்றது. 1935 ஆம் ஆண்டிலே நியூயோர்க் (அமெரிக்க) நகர சட்டவியலாளர் ஒருவர் சைவப் பெரியாருக்கு எழுதிய கடிதத்திலே இந்நூல் பற்றி பின்வருமாறு குறிப்பிட்டி ருந்தார்:*

"நான் மெய்யியலில் கிடைக் கக்கூடிய ஒவ்வொரு புத்தகத்தை யும் வாங்கிப் படித்து வருகின்றேன். ஆனால் அவை எவையுமே என்னைத் திருப்தி செய்யவில்லை. ஆனால் தங்கள் இந்து சமயத்தில் சைவக் கோட்பாடுகள் (Saiva School of Hinduism) என்ற நூலை வாசித்த போது நான் இதுவரை தேடிய மெய்யியல் இதுதான் என்பதைக் கண்டுகொண்டேன்."

(தொடரும்)

## சைவ சமயப் பெருநாட்கள்

(ஆனிப் பூரணை முதல் ஆடிப் பூரணை வரை)

| | | | | |
|---|---|---|---|---|
| ஆனி | 10உ | (24.06.2002) | திங்கள் | பூரணை விரதம் |
| | 14உ | (28.06.2002) | வெள்ளி | சங்கடஹர சதுர்த்தி |
| | 22உ | (06.07.2002) | சனி | கார்த்திகை விரதம் |
| | 23உ | (07.07.2002) | ஞாயிறு | பிரதோஷ விரதம் |
| | 26உ | (10.07.2002) | புதன் | அமாவாசை விரதம் |
| | 29உ | (13.07.2002) | சனி | சதுர்த்தி விரதம், மாணிக்கவாசகர் குருபூசை |
| | 30உ | (14.07.2002) | ஞாயிறு | (இரவு) நடேசரபிஷேகம் |
| | 31உ | (15.07.2002) | திங்கள் | (உதயம்) ஆனி உத்தர தரிசனம் குமாரஷஷ்டி விரதம் |
| ஆடி | 01உ | (17.07.2002) | புதன் | ஆடிப் பிறப்பு |
| | 05உ | (21.07.2002) | ஞாயிறு | பிரதோஷ விரதம் |
| | 08உ | (24.07.2002) | புதன் | பூரணை விரதம் |

# SAIVAISM

- Late Mr. K.Ramachandra,Editor, 'Religious Digest'-

(This Article is an abridged version of one of the eight discourses on Hinduism delivered by Late Mr.K. Ramachandra in Colombo in 1971 to Sixty four Roman Catholic Nuns. All the eight lectures were published in 1971 in England and Colombo under the title **Hinduism in a Nutshell** by Machandra Publications)

**(continued from book 113 No:02)**

When we discuss the Saiva Siddhanta Philosophy it is safe to bring its exposition under three distinct heads:

1. The metaphysics of Saiva Siddhantam - Its dogmas and doctrines.
2. The Saiva Music and devotion and
3. The Saiva Saints.

It is a well know fact that the first is too abstruse for any lecturer to make it interesting to the average student. It has always been a theme for the subtlest of intellects to build a monument of mental gymnastics, unrelated to facts of life. I have no faith in such hair-splitting logic, and shall here confine myself to listing the scriptures and mentioning their authors. Thirumanthiram is undoubtedly the foundation upon which the superstructure of Siddhantam was built. It is a monumental work by Saint Thirumoolar dealing with Vedas, Agamas, Tantras, Yogas, etc. St. Thayumanavar of the 18th century has praised St. Thirumoolar as "an Emperor among Yogi". He is also one of the 18 Siddhars of ancient Tamil Land.

There are 14 other Siddhanta Shastras, starting with Sivagnana Bodham by Meikanda Devar of the 13th century. His treatise has only 12 crispy sutras. We can call this the New Testament of Saivaism. He was a precocious child who was initiated with the mystic mantra in a miraculous way by Paranjothi Munivar of Kailas who made an aerial journey for the purpose. As Christians you are sure to recall the descending of the dove of Holy Ghost on the divine child Jesus. There is a difference of opinion in regard to the origin of Saivagnana Bodham. Tradition has it that it is the authentic translation of the Sanskrit sutras of Raurava Agama, but some later scholars, the pure - Tamil pundits, argue that the Sanskrit sutras now available are actually the translations of the original text in Tamil. This is an absolutely useless controversy except to tickle the vanity of some scholars, who lack the inner eye which illumineth the scriptures.

There is an elaborate and learned commentary in verse for Sivagnana Bodham by Arulnandi Sivacharya, popularly known as ' Sakalagama Pandithar'. His monumental work is known as Sivagnana Siddhiar. How such a giant among scholars came to be the disciple of the child - sage Meikandar has an interesting story behind.

Arulnandi was a brahmin priest, and Meikandar was a vellala by caste. His own father was a devotee and student of that priest, who used to conduct a class on religion for students. Being an erudite and profound scholar, his class was always full, until inspired by Paranjothi Munivar, Meikandar, the boy prodigy started a class in the same village. Day after day, Arulnandi found the number in his class diminishing. He made enquiries and got the information that his students had gone to listen to the child - sage. He got enraged. "What does this puny little boy, the son of my own student, know of religion, to teach his elders? I must bring him to his senses", thundered the brahmin guru. One day he walked into Meikander's class, full of self-consciousness and pride of learning. The young teacher was absorbed in his work. On that day he was explaining what Anavamalam, one of the three bondages of the souls, was. The presence of the priest was completely ignored, and wounded vanity made him to shout at the boy, challenging him whether he could illustrate Anavam (egoism). Meikandar raised his fore - finger and pointed at Arulnandi himself as supreme example of Anavam. Taken aback by this sudden burst of wisdom from the lips of the child - sage, the elder guru fell prostrate at the child's feet and begged of him to accept him as his disciple and to initiate him into the mysteries of Saiva Siddhantam. Arulnandi's disciple Maraignana Sambhandhar and his disciple,

*(continued to page 15)*

Edited & Published by Professor R. Kumaravadivel on behalf of the Saiva Paripalana Sabai - Jaffna of 450, K.K.S. Road, Jaffna & Printed at Bharathi Pathippakam, 430, K.K.S. Road, Jaffna 24.06.2002 (Fullnoon Day).